# பாரதீயம்

(சிற்றிலக்கணம்)

## முதலாம் பாகம்

பண்டிதமணி,

க. சு. நவநீதகிருஷ்ணபாரதியார்

செய்தது.

பதிப்புரிமை

எஸ். எஸ். சண்முகநாதன் அன் சன்ஸ்,

யாழ்ப்பாணம்.

# பாரதீயம்

(சிற்றிலக்கணம்)




## முதலாம் பாகம்

பண்டிதமணி,

க. சு. நவநீதகிருஷ்ணபாரதியார்

செய்தது.

பதிப்புரிமை

எஸ். எஸ். சண்முகநாதன் அன் சன்ஸ்,

யாழ்ப்பாணம்.

# முன்னுரை

பாரதீயம் முதலாம் பாகம் ஆகிய இச்சிற்றிலக்கணநூல், கற்பார்க்கும் கற்பிப்பார்க்கும் ஒரு புதிய வழியையும் ஊக்கத்தையும் உதவும் என்பது எனது நம்பிக்கை. இலக்கணங்களைப் பலகாலும் துருவித்துருவி ஆராய்ந்தும், அவற்றைத் தமிழ்க்கலைகளிலே பொதுவாக அயன்மைகாட்டிவரும் ஆங்கிலக்கல்லூரித் தமிழ் மாணவர்கட்குக் கற்றற்கண்ணே கருத்தூன்றும் வண்ணம் அவ்வப்போது மேற்கொண்டு முயன்றும் வந்த செயலின் பயனே இந்நூலாகும்.

கணிதம், சரித்திரம், பொது அறிவு முதலாகிய பல நூல்களையும் கற்று வரும் மாணாக்கர்கட்கு, இச் சிற்றிலக்கண நூல், "அவர் அறிவிற்கு அப்பாற்பட்டதாகும்" என்பது புனைந்துரை யாவதன்றி மெய்யுரையாகாது.

இந்நூலை வெளிப்படுத்த முன்வந்த சண்முகநாதன் புத்தகசாலை அதிபராகிய திரு. சி. ச. குமாரசுவாமி அவர்கட்கும், என்னையும் அதிபர் அவர்களையும் ஒன்றுபடுத்து இந்நூல் வெளிவருவதற்கு அவாக்கொண்ட திரு. **S. சீனிவாசன் M. A.** அவர்கட்கும், இந்நூற்பிரதியை உடனிருந்து வினவி எழுதி நிறைவேற்றிய திரு. **பூ. கந்தையா** அவர்கட்கும் என் நன்றி உரியதாகுக.

இங்ஙனம்,

க. சு. நவநீதகிருஷ்ணபாரதி.

மாவிட்டபுரம்,
*தெல்லிப்பழை,*
*யாழ்ப்பாணம்.*

# பாரதீயம்

( முதலாம் பாகம் )

## முதலாவது
## எழுத்து இலக்கணம்

### தோற்றுவாய்

மொழி (பாஷை) :-

**மொ**ழி ஆவது, நாம் நம்முடைய எண்ணத்தை ஓசை வழியாகப் பேச்சினாலும், எழுதப்படும் எழுத்தினாலும் பிறருக்கு அறிவிப்பது.

நாம் பேசும்பேச்சுக்களையும், எழுதும் எழுத்துக்களையும், ஒவ்வொரு நிகழ்ச்சிக்கு ஒவ்வொரு வகையாகப் பயின்று வருகின்றோம் அன்றோ? இப்படிப் பயின்று வருவதன் காரணத்தை அறிந்து கொள்வதில் எவர்தாம் விருப்பங் கொள்ளார்? இந்த விருப்பத்தினை நிறைவேற்றுவதற்குக் கருவியாக உதவுவதே இலக்கணம்.

சிறுவர்களே!

அவன் வந்தாள்;
அவள் வந்தான்;
அவர் வந்தன;
அது வந்தார்;
அவை வந்தாள்;

என்று நாம் சொல்லவே மாட்டோம். நம்முள்ளே ஒரு சிறுவன் தானும் அப்படிச் சொல்ல மாட்டான்; பிறன் சொல்லச் சிரிக்காமல் இருக்கவும் மாட்டான். இப்படிச் சொல்ல நாம் ஏன் இணங்கவில்லை என்பதன் காரணந்தான் நமக்குப் புலப்படவில்லை.

இனி,

அவன் வந்தான்;
அவள் படிப்பாள்;
அவர் பெரியர்;
நான் போனேன்;
நாளைக்கு வருவேன்;
நேற்று வந்தான்;

என்று கூறவே நாம் விரும்புகின்றோம்.

நேற்றைக்கு வருவாள்; நீ வந்தேன்; என்ற வகையாகப் பேசாமலும், நேற்றைக்கு வந்தான்; நீ வந்தாய் என்ற வகையாகப் பேசியும் வரும் காரணத்தை விளக்குவதே இலக்கணமாகும் என நாம் இப்போது அறிந்து கொண்டோம்.

நாம் பேசும் ஒலியானது, பொருளைக் கருதாத போது "ஒலி" எனவும், பொருளைக் கருதும்போது "சொல்" எனவும் கூறப்படும். மரத்தால் செய்யப்பட்ட ஒரு யானையைக் காணும்போது அந்தப் பொருள் எதனாற் செய்யப்பட்டது என்பதிலே நமது எண்ணம் செல்லும்போது, அங்கே யானை என்ற பொருளை முழுதும் மறந்துவிட்டு, அந்த யானை செய்யப்பட்ட மரம் யாது? என்பதிலேயே நமது அறிவு செல்லும் அன்றோ? இனி யானையாகிய பொருளை அறிய நாம் முற்படும்போது,

இந்த யானையின் துதிக்கை வியப்பைத்தருகின்றது. இதன் கால்கள் பனங்குற்றிபோலக் காணப்படுகின்றன, இதன் கொம்புகள் தாழை மரத்தின் விழுதுகள் போன்று இருக்கின்றன; என்ற வகையாக நினைப்போமேயன்றி; இந்த யானை எந்த மரத்தாற் செய்யப்பட்டது என்பதை முழுதும் மறந்து விடுகிறோம். இப்படியே ஒரு சொல்லின் ஒலியைப் பற்றி நினைக்கும்போது, அந்தச்சொல் எந்தப்பொருளை உணர்த்துகிறது என்பதை மறந்து விடுகிறோம். அந்தச்சொல் எந்தப் பொருளை உணர்த்துகின்றது என நினைக்கும்போது, அந்தப் பொருளை உணர்த்தும் சொல்லுக்குரிய ஓசையை மறந்துவிடுகின்றோம். இதனால், நாம் பேசும்சொற்களிலே உள்ள ஒலியை நினைக்கும்போது அதனால் உணர்த்தப்படும் பொருளை மறந்து விடுவதும், அந்தச் சொல்லால் உணர்த்தப்படும் பொருளை அறிந்து கொள்ளும்போது, அதனுடைய ஒலியை மறந்து விடுவதும் நமக்கு இயல்பாகும் என இப்போது அறிந்து கொண்டோம் அன்றே? இதனால் நாம் ஒலியையும் பொருளையும் சொற்களால் அறிந்து கொள்ளலாம் என்பது தெளிவாகிறது.

சொற்களின் ஒலியைத் தெரிந்து கொள்ளாதபோது அஃது உணர்த்தும் பொருளை நாம் எப்படி அறிந்து கொள்ளக் கூடும்? அதனால் முதன்முதலிலே சொல்லின் ஒலியைப்பற்றி அறிந்து கொள்ளுவோம்.

## 1. சொல்லின் ஒலியும் எழுத்தும்:-

பூவிலே ஒலித்துக்கொண்டு இருப்பது "ஈ" (இலையான்); இங்கே ஈ என்னும் சொல் தனிப்பட்ட ஒலியாக உள்ளது.

நகை

அணில்

தடுக்கு
யாழ்ப்பாணம்

என்னும் சொற்கள், ந - கை; அ - ணி - ல்; த - டு - க் - கு; யா - ழ் - ப் - பா - ண - ம், என, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு வகைப்பட்ட ஒலிகளை உடையனவாக அமைந்துள்ளன. இதனால் சொல்லின் ஒருவகை ஒலிகளையும், இரண்டு முதலிய பல தனிப்பட்ட ஒலிகளையும் நாம் கண்டு கொள்ளலாம்.. இப்படி வரும் தனிப்பட்ட ஓசையே **எழுத்து** எனப்படும்

## 2. உயிர் எழுத்துக்கள்:-

மாணவர்களே! நீங்கள் மூச்சை வெளியிலே விடாமல் அ, ஆ, இ, ஈ என்னும் எழுத்துக்களை ஒலிக்கச் செய்து பாருங்கள். அவை மூச்சு விடாமல் ஒலிக்கவே மாட்டா. மூச்சுவிட்டே ஒலிக்கவேண்டிய எழுத்துக்களை, மூச்சுவிடும் நம்மைப் போலவே உயிர் உள்ளன என்று நாம் நினைக்கும்படி **உயிர் எழுத்துக்கள்** என்று கூறுவர்.

இந்த உயிர் எழுத்துக்கள்,

**அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ**
எனப் பன்னிரண்டாம்.

## 3. உயிர் எழுத்தின் வகைகள்:-

பிள்ளைகளே! ஆ, ஈ, ஊ, என்னும் எழுத்துக்களைக் குறுக்கி மூச்சுவிட்டு ஒலித்துப் பார்த்தால், அவ்வொலிகள் தோன்றப் பெறு. ஆ, ஈ, ஊ என்னும் எழுத்துக்

களைக் குறுக்கி மூச்சுவிட்டு ஒலிப்பீர்களாகில், "ஆ" என்பது "அ" எனவும், "ஈ" என்பது "இ" எனவும், "ஊ" என்பது "உ" எனவும் ஒலிக்கும். ஆ, ஈ, ஊ என்னும் எழுத்துக்களைக் குறுக்கி மூச்சுவிடாமல், நீட்டி மூச்சு விட்டு ஒலிப்பீர்களாகில் அவை தோன்றப் பெறும். ஆகவே, உயிர் எழுத்துக்கள், குறுக்கி மூச்சு விட ஒலிப்பதும், நீட்டி மூச்சுவிட ஒலிப்பதும் என இரண்டு வகைப்படும். குறுக்கி ஒலிப்பதைக் **'குற்றெழுத்து'** என்றும், நீட்டி ஒலிப்பதை **"நெட்டெழுத்து"** என்றும் சொல்வர்.

## 4. குற்றெழுத்துக்கள்:-

அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து எழுத்துக்களும் குற்றெழுத்துக்களாம். இவை குறில்என்றும் சொல்லப்படும்.

## 5. நெட்டெழுத்து:-

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு எழுத்துக்களும் நெட்டெழுத்துக்களாம். இவை நெடில் என்றும் சொல்லப்படும்.

## 6. ஒற்று எழுத்துக்கள்:-

சிறுவர்களே! நீங்கள் மூச்சு விட்டுக்கொண்டு க், ங், ச், ஞ், வ், ய், என்று ஒலிக்கப் புகுந்தால், 'க்' என்பது "க, கா" என்றவாருகவும், "ட்" என்பது "ட டா" என்றவாருகவும், "ங்" என்பது "ங, ஙா" என்றவாருகவும், **பிறவாருகவும், ஏனைய எழுத்துக்களும் அவ்வாறே யாகவும்** ஒலிப்பதைக் காண்பீர்கள். ஆனால் மூச்சை

வெளியே விடாமல் (அழுக்கி) ஒற்றி ஒலிப்பீர்களாயின் அவை ஒலிக்கும். இவ்வெழுத்துக்கள், உயிர்போல மூச்சு விட ஒலியாமல், மூச்சினை அழுக்கத் தத்திக்கொண்டு ஒலிப்பதாக வெளிப்படுவதால் "ஒற்று எழுத்துக்கள்" எனப்படும்.

இவ்வெழுத்து மூச்சின் உதவி இன்றி வராது. உடம்பு (மெய்) எப்படித் தானே இயங்காமல் உயிரின் உதவிகொண்டு இயங்குமோ, அதே போல இவ் வொற்றெழுத்தும் உயிர் எழுத்தின் உதவிகொண்டு ஒலிக்கும் காரணத்தால் அது **மெய்** (உடம்பு) எழுத்து என்று கூறப்படும்.

உயிர் எழுத்து = ஆவி எழுத்து
ஒற்று எழுத்து = (உடம்பு) மெய் எழுத்து
ஒற்றுதல் = அழுக்கி வெளிப்படுத்தத் தத்திக் கொண்டு வெளிப்படுதல்.

## 7. மெய் எழுத்தின் வகைகள்:-

மெய் எழுத்துக்கள் மூச்சை விரைவாக இழுத்து அழுக்கத் தத்திக்கொண்டு வருவனவும், மூச்சை மெல்ல இழுத்து அழுக்கத் தத்திக்கொண்டு வருவனவும் மூச்சை விரைவாகவும் மெல்லிதாகவும் இழுக்காமல் இடைப்பட்டதாக இழுத்து அழுக்கத் தத்திக்கொண்டு வருவனவும் ஆக மூன்று வகைப்படும். அந்தவகையால் மெய் எழுத்துக்கள் **மூன்று இனங்களாகப்** பிரிக்கப்படும்.

விரைவாக மூச்சை இழுத்து அழுக்க (வலிந்து) ஒலிக்கும் ஒற்றுக்களை (மெய்களை) **வல் - இனம்** என்றும், மெல்லிதாக இழுத்து அழுக்க (மெலிந்து) ஒலிக்கும் ஒற்றுக்களை (மெய்களை) **மெல் - இனம்** என்றும், அவ்

விரண்டு இனங்களின் நடுப்பட்டனவாக அழுக்க (இடைப்பட்டு) ஒலிக்கும் ஒற்றுக்களை (மெய்களை) இடை - இனம் என்றும் அறிவுடைய பெரியோர் கூறுவர்.

8. வல்—இனம்:-

**க், ச், ட், த், ப், ற்**

என்னும் ஆறு மெய் எழுத்துக்களும் வல் - இனம் என்று கூறப்படும்.

வல்லினம் = வன்கணம், வலி.

9. மெல்—இனம்:-

**ங், ஞ், ண், ந், ம், ன்**

என்னும் ஆறு மெய் எழுத்துக்களும் மெல் - இனம் என்று கூறப்படும்.

மெல்லினம் = மென்கணம், மெலி.

10. இடை — இனம்:-

**ய், ர், ல், வ், ழ், ள்**

என்னும் ஆறு மெய் எழுத்துக்களும் இடை - இனம் என்று கூறப்படும்.

இடையினம் = இடைக்கணம், இடை.

I பயிற்சி வினுக்கள்:

1. அம்மை, ஏணி, கப்பல், ஒட்டகம் என்னும் இவற்றில் வரும் உயிர் எழுத்துக்கள் எவை?

2. அணில், ஆடு, இலை, ஈடு, ஔவை, ஊசல், ஊதல், ஒன்பது, ஓது, வேலை, வௌ இவற்றில் உள்ள உயிர்க் குற்றெழுத்துக்கள் எவை? நெட்டெழுத்துக்கள் எவை?

3. உயிர் எழுத்து, ஒற்றெழுத்து, வல் எழுத்து, மெல் எழுத்து, இடை எழுத்து என இவை பெயர் பெற்ற காரணம் யாது?

4. வல்லினமெய்கள் அமைந்த சொற்கள் நான்கு கூறுக.

5. மெல்லினமெய்கள் அமைந்த சொற்கள் நான்கு கூறுக.

6. இடையினமெய்கள் அமைந்த சொற்கள் நான்கு கூறுக.

7. கூர்தல், குரங்கு, தொட்டி, எல்லாம், வள்ளுவன், எய்தான், பரப்பினன், ஊஞ்சல் இவற்றிலுள்ள மூவின மெய்களையும் வெவ்வேறாகப் பிரித்து எழுதுக.

## 11. உயிர் - மெய் - எழுத்து:-

இளைஞர்களே! உயிர் எழுத்துக்களும், மெய் எழுத்துக்களும் கலந்து ஒரே ஒலி உள்ளனவாகி வரும் எழுத்துக்களும் உண்டு. அவைதாம் "உயிர்மெய்யெழுத்து" எனப்படும்.

உதாரணம்: "க்" என்னும் மெய்யின்மேல் "அ" என்னும் உயிர் எழுத்துக் கலக்கக் "க" என ஒரு தனிப்பட்ட ஓசை உண்டாகும். [மெய் எழுத்துக்களுள் ஒன்றும் உயிரெழுத்துக்களில் ஒன்றும் தம்முள்ளே கலந்து தனிப்பட்ட ஓசையாக ஒலிப்பதனால் உயிர்மெய் எழுத்து எனப் பெயர்பெற்றது.]

## 12. உயிர் மெய் எழுத்துக்களின் வகை:-

உயிர்மெய் எழுத்துக்கள், வல்லின உயிர்மெய், மெல்லின உயிர்மெய், இடையின உயிர்மெய் என மூன்று வகைப்படும்,

## 13. வல் இன உயிர்மெய் எழுத்துக்கள்:-

க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறு வல்லெழுத்துக்களின் மேல அ, ஆ முதலாகிய பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் ஏறி வர (6 × 12) எழுபத்திரண்டு (72) வல்லின உயிர்மெய் எழுத்துக்களும் ஒலிக்கும்.

உதாரணம்:-

க் + அ = க; க் + ஆ = கா; க் + இ = கி; க் + ஈ = கீ; க் + உ = கு; க் + ஊ = கூ; க் + எ = கெ; க் + ஏ = கே; க் + ஐ = கை; க் + ஒ = கொ; க் + ஓ = கோ; க் + ஔ = கௌ.

இப்படியே, ச், ட், த், ப், ற், என்னும் எஞ்சிய ஐந்து வல்லின மெய்களோடும், அ, ஆ, முதலிய பன்னிரண்டு உயிர்களேயும் சேர்த்துப் பயின்று கொள்க.

## 14. மெல்இன உயிர்—மெய் எழுத்துக்கள்:—

"ங், ஞ், ண், ந், ம், ன்," என்னும் ஆறு மெல்லின மெய்யெழுத்துக்களின் மேல் "அ, ஆ," முதலாகிய பன்னிரண்டு உயிர் எழுத்தக்களும் ஏறிக்கலந்து ஒலிக்க (6 × 12) எழுபத்திரண்டு மெல்லின உயிர் மெய் எழுத்தக்களும் ஒலிக்கும்.

உ—ம்:— ங்+அ=ங; ங்+ஆ=ஙா; ங்+இ=ஙி; ங்+ஈ=ஙீ; ங்+உ=ஙு; ங்+ஊ=ஙூ; ங்+எ=ஙெ; ங்+ஏ=ஙே; ங்+ஐ=ஙை; ங்+ஒ=ஙொ; ங்+ஓ=ஙோ; ங்+ஔ=ஙௌ.

இங்ஙனமே ஞ், ண், ந், ம், ன், என்னும் எஞ்சிய ஐந்து மெல்லின மெய்களோடும் "அ, ஆ" முதலிய உயிர்களைச் சேர்த்துப் பயின்றுகொள்க.

**15. இடை இன உயிர் மெய் எழுத்துக்கள்:—**

ய், ர், ல், வ், ழ், ள், என்னும் ஆறு இடை இன மெய் எழுத்துக்களின் மேல் "அ, ஆ" முதலாகிய பன்னிரண்டு உயிர் எழுத்துக்களையும் ஏற்றி ஒலிக்க (6×12) எழுபத்திரண்டு இடையின உயிர் மெய்களும் ஒலிக்கும்.

உதாரணம்:—

ய்+அ=ய; ய்+ஆ=யா; ய்+இ=யி; ய்+ஈ=யீ; ய்+உ=யு; ய்+ஊ=யூ; ய்+எ=யெ; ய்+ஏ=யே; ய்+ஐ=யை; ய்+ஒ=யொ; ய்+ஓ=யோ; ய்+ஔ=யௌ.

இப்படியே ஒழிந்த ர், ல், வ், ழ், ள், என்னும் எஞ்சியுள்ள ஐந்து இடையின மெய்களோடும் "அ, ஆ" முதலாகிய பன்னிரண்டு உயிர் எழுத்துக்களையும் சேர்த்துப் பயின்று கொள்க.

**உயிர் மெய் எழுத்துக்கள்,**

| | |
|---|---|
| வல்லின உயிர் மெய் எழுத்து | = **72** |
| மெல்லின உயிர் மெய் எழுத்து | = **72** |
| இடையின உயிர் மெய் எழுத்து | = **72** |
| மொத்தம்:- | = **216** |

என்று அறிந்து கொள்க.

## 16. ஆய்த எழுத்து:—

பிள்ளைகளே! உயிர் எழுத்து, மெய்யெழுத்து, உயிர் மெய்யெழுத்து என மூவகையான எழுத்துக்களையும் அறிந்துகொண்டீர்கள். இனி ஆய்த எழுத்து என ஒரு வகை எழுத்தும் உள்ளது. அதனையும் அறிந்து கொள்வீர்களாக.

இந்த ஆய்த எழுத்து "ஃ" இப்படி மூன்று புள்ளி வடிவம் உடையதாக எழுதப்படும்.

இந்த எழுத்து வல் லெழுத்தைக் காட்டிலும் விரைவாக இழுத்து அழுக்கத் தள்ளி வெளிப்படும் ஒலி யாகும்; இதுவே ஆய்த எழுத்து எனப்படும். இங்ஙனம் அதிக விரைவினால் அழுக்கும் அழுக்கம், அதிகப்பட்டமையால் இதன் மேல் உயிர் ஏறி ஒலிப்பதற்கு இடமில்லை ஆதலினாலே உயிர் ஆய்தம் என்பதொன்று இல்லையாயிற்று. இந்த ஆய்த எழுத்துக் குற்றெழுத்துக்கும் உயிர் மெய் வல் லெழுத்துக்கும் நடுவிலேதான் சொற்களில் வரும்.

**உதாரணம்:—**

அஃது, எஃகு.

**2. பயிற்சி வினாக்கள்:—**

1. உயிர் மெய் எழுத்து என்பது யாது?
2. வல்லின உயிர் மெய் எழுத்துக்கள் என ஏன் அவை அப்பெயர் பெற்றன?
3. மெல்லின உயிர் மெய்களும் இடையின உயிர் மெய்

களும் ஏன் அப்பெயர் பெற்றன?

4. வல்லின உயிர் மெய்கள் எவை?
5. மெல்லின உயிர் மெய்கள் எவை?
6. இடையின உயிர் மெய்கள் எவை?
7, ஆய்த எழுத்து எப்படி ஒலிக்கும்?
8. உயிர் ஆய்தம் என ஒன்று ஏன் இல்லை?
9. ஆய்தம் சொற்களில் எவ்விடத்து எப்படி வரும்?

## 17. தமிழ் மொழியிலே வழங்கும் எழுத்துக்கள்:—

| | | |
|---|---|---|
| 1. | உயிர் எழுத்துக்கள் | = 12 |
| 2. | மேய் ,, | = 18 |
| 3. | உயிர்மெய்,, | = 216 |
| 4. | ஆய்த எழுத்து | = 1 |
| | ஆகமொத்தம் | 247 ஆகும். |

## 18. சுட்டும் வினவும்:—

சுட்டு:— பாலர்களே! யான் இப்போது சொல்லப் போவதைக் கருத்தூன்றிக் கேளுங்கள்.

கண்ணன் வந்தான் **அவன்** ஒருபுடவையை எனக்குக் கொடுத்தான். இங்கே **அவன்** என்றது **கண்ணன்** ஆகிய பொருளைச் சுட்ட வந்தது.

மாவிட்டபுரம் என்பது எனது ஊர். அது காங்கேயன் துறைக்குத் தெற்கே உள்ளது. இங்கே அது என்பது இடத்தைச் சுட்டவந்தது.

மாரியிலே மழைபெய்யும்; **அஃது** எப்போது வரும். இங்கே, '**அஃது**' என்பது காலத்தைச் சுட்டவந்தது.

மாமரத்தின் கிளை ஒடிக்கப்பட்டது; அது காற்றால் ஒடிக்கப்பட்டது. இங்கே 'அது' என்பது மாமரத்தின் உறுப்பாகிய கிளையைச் சுட்டவந்தது.

கந்தனுக்கு நன்மையுண்டாயிற்று. அஃது இப்போது தான் உண்டாயிற்று. இங்கே 'அஃது' என்பது நன்மை என்னும் குணத்தைச் சுட்டவந்தது.

பாலன் ஆட்டம் ஆடினான்; அதுநன்றாக இருந்தது இங்கே 'அது' என்பது ஆட்டம் என்னும் தொழில் பெயரைச் சுட்டவந்தது.

இப்படியே வரும் அவன், அவள், அவர், அது, அவை என்பனவும், இவன், இவள், இவர், இது, இவை, என்பனவும், உவன், உவள், உவர், உது, உவை, என்பனவும் ஆகிய பதினைந்து பெயர்களும் சுட்டுப்பெயர்கள் எனப்படும். இவை, பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், (தொழிலின் பெயரை யுணர்த்தும்) தொழிற்பெயர் என்னும் ஆறு வகைப் பெயர்களையும் சுட்டி அவற்றுக்குப் பெயராக வரும். இச்சுட்டுப் பெயர்களின் முதலில் உள்ள அ,இ,உ, என்னும் மூன்று எழுத்துக்களும் இவ்வாறு சுட்டுப் பொருளில் வரும்போது "சுட்டு எழுத்துக்கள்" எனப்படும்.

அவன், அவள், அவர், அது, அவை என்பவற்றில் உள்ள 'அ' என்பதும்,

இவன், இவள், இவர், இது இவை, என்பவற்றில் உள்ள 'இ' என்பதும்,

உவன், உவள், உவர், உது, உவை, என்பவற்றில் உள்ள 'உ' என்பதும் சுட்டுப் பொருளில் வந்திருத்தலை உணர்ந்து கொள்க.

அரசன், இலங்கை, உலக்கை என்னும் சொற்களின் முதல் எழுத்துக்கள் "ஆகிய அ, இ, உ," என்பவை ஒரு பொருளையும் சுட்டிக்காட்டாமையால் அம்மூன்றும் சுட்டெழுத்துக்கள் ஆகா. அவைகளை உயிர்க்குறில் என்றே கூறவேண்டும்.

இச் சுட்டெழுத்துக்களுள் 'அ' என்பது தூரத்தில் உள்ள பொருள் முதலாகிய ஆறு பெயர்களையும், 'இ' என்பது சமீபத்தில் உள்ள ஆறு பெயர்களையும், 'உ' என்பது இடையிலும் பின்புறத்திலும் உள்ள ஆறு பெயர்களையும் சுட்டுவனவாம்.

19. சுட்டுப் பொருளின் வகை:—

| | |
|---|---|
| அவன், | அ-வ்வீடு. |
| இவர், | இ-வ்வூரர். |
| உது, | உ-வ்வூர். |

அவன் என்னும் சொல்லின் முதல் எழுத்தாகிய சுட்டெழுத்தினை நீக்கி அ—"வன்" என்றால், ஒரு பொருளும் கொள்ள இயலாது. அ+வீடு என்பதில் முதல் எழுத்தாகிய 'அ' என்பதை நீக்கி 'வீடு' என்றால் அது பொருளைத் தருஞ்சொல்லாக நிலைபெறுகிறது.

இப்படியே சுட்டெழுத்தை நீக்க அந்தச் சொல்லில் எஞ்சி உள்ளனவாகிய எழுத்துக்கள் யாதேனும்

ஒரு பொருளைக் குறியாது விட்டால் அதனை "அகச்சுட்டு" என்பர்.

உதாரணம்: வன், வள், து, என்னும் மூன்று சொற்களும், "அ, இ, உ," என்னும் மூன்று சுட்டெழுத்துக்களையும் தம் அகத்திலே (சொல்லுக்கு உள்ளே) கொண்டபோதே பொருளைக்காட்டுதல் கண்டுகொள்க. அவன் முதலாகிய பதினைந்துமே அகச்சுட்டு என்னும் பொருளில் வந்தன.

அ-வ்வீடு; இ-ப்பெண், உ-ம்மரம் என்பனவற்றில் முறையே "வீடு", "பெண்", "மரம்" என்னும் சொற்களுக்குப் புறம்பாக (புறத்தில்) சுட்டெழுத்துக்கள் நின்று சுட்டுப் பொருளில் வந்தன. சொல்லுக்குப்புறத்தே வந்த சுட்டெழுத்துக்களைப் "புறச்சுட்டு" என்பர்.

அ என்பது அந்த எனவும், இ என்பது இந்த எனவும், உ என்பது உந்த எனவும் வருவதும் உண்டு.

உதாரணம்:—

| | |
|---|---|
| அப் பொருள் | அந்தப் பொருள் |
| இம்மாடு | இந்த மாடு |
| உத்தோட்டம் | உந்தத் தோட்டம். |

20. வினா:—

| | |
|---|---|
| எவன் வந்தான்? | (எ-வன்) |
| அவன் சொல்லியது யாது? | (யா-து) |
| இராமனா போனான்? | (இராமன்-ஆ) |
| கந்தனோ நின்றான்? | (கந்தன் ஓ) |
| ஏது இது? | (ஏ-து) |

அவனே வந்தான்? (அவன்-ஏ)

இவையெல்லாம் வினாக்கள் அல்லவா? வினாப் பொருளைக் குறிப்பிட எ, யா, ஆ, ஓ, ஏ, என்னும் எழுத்துக்கள் வந்தன.

எவன் என்பதில் உள்ள எ என்பது வினா எழுத்து.
யாது என்பதில் உள்ள யா என்பது வினா எழுத்து.
இராமனா என்பதில் உள்ள ஆ என்பது வினா எழுத்து.
கந்தனோ என்பதில் உள்ள ஓ என்பது வினா எழுத்து.
ஏது என்பதில் உள்ள ஏ என்பது வினா எழுத்து.
அவனே என்பதில் உள்ள ஏ என்பது வினா எழுத்து.

வினா எழுத்துக்கள் சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரும்.

எவன் என்பதில், சொல்லின் முதலில் 'எ' என்னும் வினா எழுத்து வந்தது.

எம்-மாடு என்பதிலும் சொல்லின் முதலில் 'எ' என்னும் வினா எழுத்து வந்தது. யாது என்பதில் 'யா' வும் அவ்வாறே வந்தது.

பொன்னன் + ஆ என்பதில் சொல்லின் இறுதியில் ஆ என்னும் வினா எழுத்து வந்தது.

கந்தன் ஓ என்பதிலும் சொல்லின் இறுதியில் 'ஓ' என்னும் வினா எழுத்து வந்தது.

ஏது என்பதில் சொல்லின் முதலில் 'ஏ' என்னும் வினா எழுத்து வந்தது.

அவன் ஏ என்பதில் சொல்லின் இறுதியில் 'ஏ' என்னும் வினா எழுத்து வந்தது.

## 21. வினா வகை:—

அகச்சுட்டுப் புறச்சுட்டு எனச் சுட்டு இரண்டு வகைப் பட்டதுபோலவே, வினாவும் "அகவினா" "புறவினா" என இரண்டு வகைப்படும்.

"எ, யா" என்னும் வினா எழுத்துக்கள், சொல்லின் முதலிலே அகவினா ஆகவும் புறவினா ஆகவும் வரும்.

உதாரணம்:—

'எ'வன் என்பதில் உள்ள 'எ' என்பது, சொல்லின் முதலில் அகவினா ஆக வந்தது.

'எ'க்குதிரை என்பதில் உள்ள 'எ' என்பது சொல்லின் முதலில் புறவினா ஆக வந்தது.

ஆ ஓ என்னும் இரண்டும் சொல்லின் இறுதியிலே புறவினா ஆக வரும்.

உதாரணம்:

பொன்னன் ஆ<br>
கந்தன் ஓ } ஆ ஓ என்பன இரண்டும் சொல்லின் இறுதியில் புறவினா ஆக வந்தன.

குறிப்பு:—

சொல்லின் முதலிலே அகவினா புறவினா என்னும் இரண்டும் வரும். சொல்லின் இறுதியிலே புறவினா மட்டும் வரும்.

'யா'-து என்பதில் உள்ள 'யா' என்பது சொல்லின் முதலிலே அகவினாவாக வந்தது.

அவன்—'வு' என்பதில் சொல்லின் இறுதியிலே 'வு' என்பது புற வினவாக வந்தது.

3 பயிற்சி வினக்கள்:—

1. சுட்டு எனப் பெயர் வந்த காரணம் யாது?
2. வின எனப் பெயர் வந்த காரணம் யாது?
3. அழகு, இல்லை, உடனே இவற்றின் முதலில் உள்ள அ, இ, உ, என்பன என்ன எழுத்துக்கள்?
4. இருளன், முத்தம்மாள், யானை, ஒட்டகம் என்பவற்ருேடு சுட்டு எழுத்துக்களைச் சேர்த்து எழுதுக?
5. அப்படிச் சேர்த்தால் அவை என்ன சுட்டாகும்?
6. சுட்டு, சொல்லின் எவ்விடத்தே வரும்?
7. வின, சொல்லின் எவ்விடத்தே வரும்?
8. அம்மலை, இவன், இப்பாம்பு, உந்தக் குதிரை, உவன், அவன், இவற்றிலுள்ள அகச்சுட்டுக்கள் எவை? புறச் சுட்டுக்களெவை?
9. எந்த ஊர்? எது நிகழ்ந்தது? அவள் சொன்ஞனா? அவனே பெரியன்? இவற்றுள் வின எழுத்துக்கள் எவை? அகவின எவை? புறவின எவை?

## 22. இன எழுத்துக்கள்:—

எழுத்துக்கள் ஒலி, வடிவம், ஒலிக்கும் கால அளவு முதலியவற்ருல் ஒன்றனேடு மற்ருென்று இனம் (தொடர்பு) உடையனவாகும். அப்படித் தொடர்புடைய எழுத்துக்கள் இன எழுத்துக்கள் எனப்படும்.

'அ' என்பதற்கு 'ஆ' என்பதும்
'இ' என்பதற்கு 'ஈ' என்பதும், 'ஐ' என்பதும்
'உ' என்பதற்கு 'ஊ' என்பதும், 'ஔ' என்பதும்
'எ' என்பதற்கு 'ஏ' என்பதும்

'ஒ' என்பதற்கு 'ஓ' என்பதும் ஆகிய (இவை உயிருள்ளே) குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் தமக்குள் இன எழுக்களாம்.

க்—ங்; ச்—ஞ்; ட்—ண்; த்—ந்; ப்—ம்; ற்—ன்; என வல்லின மெய்கட்கு மெல்லின மெய்கள் இனமாம்.

ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறு இடையின மெய் எழுத்துக்களும் ஓர் இன மாகும். அவற்றுக்கு வேறு எழுத்துக்களின் தொடர்பு இல்லை.

4. பயிற்சி வினுக்கள்:—

1 இன எழுத்துக்கள் என்று சொல்லப்பட்டதேன்?

2 ன், த், ம், ஐ, ச், ஔ, ஈ, வ், என்னும் எழுத்துக்கட்கு இன எழுத்துக்கள் எவை?

## 23. குற்றியல் 'உ' கரம்:—

'உ' என்னும் எழுத்தை ஒரு நொடிப் பொழுதினுள் இசைக்க வேண்டும். இந்த 'உ' சொல்லின் இறுதியில் நிற்கும் போது ஒரு நொடிப் பொழுதில் இசைக்காமல் அரை நொடிப் பொழுதினுள் இசைத்து வருவதும் உண்டு. அப்படிக் கால அளவு குறைந்து இசைக்கும் 'உ' கரத்தைக் குற்றியல் உகரம் என்பர்.

ஓசையாலே குறுமையாகிய இயல்பினை உடைய உகரம் (குறுமை + இயல் + உகரம்) குற்றியல் உகரம் எனப்பட்டது.

I 1. குற்றியல் உகரம் சொற்களிலே தான் வரும்.

2. குற்றியல் உகரம் சொல்லின் முதல் இடைகளில் வராது.

3. குற்றியல் உகரம் சொல்லின் இறுதியிலே இடையின மெல்லின மெய்களின் மேல் ஏறிவராது.

4. குற்றியலுகரம் சொல்லின் இறுதியிலே க், ச், ட், த், ப், ற், என்னும் ஆறு வல்லின மெய்களுள் ஒன்றன்மேல் ஏறிவரும்.

II 1. குற்றியல் உகரம் இரண்டு எழுத்துக் களாலாகிய சொற்களின் கடைசியிலும், மூன்று முதலாகப் பல எழுத்துக்களால் ஆகிய சொற்களின் கடைசியிலும் வல்லின மெய்யின் மேல் ஏறிவரும்.

2. இரண்டு எழுத்துச் சொல்லில் வரும் குற்றியலுகரம்:—

இரண்டு எழுத்துச் சொற்களின் முதல் எழுத்து நெட்டெழுத்தாக இருந்தால்தான் அதனை அடுத்து வல்லின மெய்யின்மேல் ஏறிவந்த உகரம் குற்றியல் உகரம் ஆகும். அது குற்றெழுத்தாக இருந்தால் குற்றியல் உகரம் ஆகாது.

உதாரணம்:— ஆடு, நாடு, பாடு, ஆறு, காசு, காது. 'ஆடு' என்பதை 'அடு, என்றாலும், 'நாடு' என்பதை 'நடு' என்றாலும், 'பாகு' என்பதை 'பகு' என்றாலும், 'ஆறு' என்பதை 'அறு' என்றாலும், 'காசு' என்பதைக் 'கசு, என்றாலும், 'காது' என்பதை 'கது' என்றாலும், இறுதியில் உள்ள 'உ'கரம் குற்றியலுகரம் ஆகாது. ஏனென்றால், அந்தச் சொற்களின் முதல் எழுத்துக் குற்றெழுத்தாக நிற்றலால்.

மூன்று எழுத்துக்களும் அதற்கு மேற்பட்ட எழுத்துக்களும் கொண்ட சொற்களில் வரும் குற்றியலுகரம் வருமாறு:—

அஃது, வரகு, இராகு, யாவது, பஞ்சு, கொக்கு, மார்பு, இவை மூன்று எழுத்துக்களால் ஆன சொற்கள். இவற்றின் இறுதியிலே வல்லின மெய்யின் மேல் 'உ' கரம் ஏறிவந்து ஓசையிற் குறைவுபட்டது.

வடக்கு, ஒன்பது, வருவது இவை நாலு எழுத்துச் சொற்கள். இவற்றின் இறுதியிலே குற்றியலுகரம் வந்துளது.

சுண்ணாம்பு, பிண்ணாக்கு என்பன ஐந்து எழுத்துச் சொற்கள். இவற்றின் இறுதியிலே குற்றியலுகரம் வந்தது.

ஆசிரியர்:— 'கு' என்பது குற்றியல் உகரந்தானே?

மாணவன்:- அது சொல்லாகாதே.

ஆசிரியர்:— வரவு என்பது குற்றியல் உகரமா?

மாணவன்:- அது சொல்லாக இருந்தாலும் உகரம் வல்லின மெய்யின் மேல் ஏறி வரவில்லையே!

ஆசிரியர்:— அப்படியானால் குடை என்பது குற்றியலுகரந்தானே?

மாணவன்:- அதுவும் இல்லை. சொல்லின் முதலில் குற்றியலுகரம் வராது.

ஆசிரியர்:— சொல்லின் முதலினும் இடையினும் வல்லின மெய்யின் மேல் உகரம் வந்தாலும் குற்றியல் உகரம் ஆகாது போனும், அப்படியாகில் 'மடு' என்பது உண்மையாகவே குற்றியலுகரம் என்று நம்புகிறேன். உன்னுடைய கருத்து யாது?

மாணவன்:- ஐயா! இப்படியெல்லாம் கேட்கலாமா? 'மடு' என்ற சொல்லானது, வல்லின மெய்

யின் மேல் ஏறிய உகரத்தை இறுதியிலே கொண்ட இரண்டு எழுத்துச் சொல்லாயி னும், அதன் முதல் எழுத்து 'ம' என்னும் குற்றெழுத்தாக இருக்கிறது அன்றோ?

ஆசிரியர் :— ஓகோ! அப்படியா? 'மாடு' என்றால்........

மாணவன்:- ஆம்; 'மாடு' என்பதன் இறுதியில் உள் ளது குற்றியல் உகரந்தான். யாரும்மறுக்க முடியாது.

## 24. முற்றியல் உகரம்:—

குற்றியல் உகரம் அல்லாத எல்லா உகரங்களும் முற் றியல் உகரங்களாம்.

உதாரணம்:— உ, கு, நு, யு, 'உ'லை, 'கு'லை, 'து'ணை, 'நு'னி, 'மு'தலை, 'முது'மை, 'அரு'மை, 'அமு'தம், 'வா'யு, 'உருமு' (இடி) 'பசு' என்பன போன்றவற்றில் வரும் உகரம் எல்லாம் முற்றியல் உகரமாம்.

## 5. பயிற்சி வினாக்கள்:—

1 குற்றியல் உகரம், சொல்லின் எவ்விடத்தே, எந்த மெய் யின் மேல் ஏறிவரும்?

2 நடு, முதுகு, விரவு, அழுதல், தொடக்கு, எழுபது, குடில், எட்டு, எழு, ஆறு,

கு, சு, டு, து, பு, று, என்னும் ஆறு வல்லின உயிர் மெய், ஙு, ஞு, ணு, நு, மு, னு, என்னும் ஆறு மெல்லின உயிர்மெய், யு,ரு,லு,வு,ழு,ளு என்னும் ஆறு இடையின உயிர் மெய்ஆகிய இவற்றுள் எவை குற்றியல் உகரம்? எவை முற்றியலுகரம்?

## 25. மாத்திரை:—

ஒரு கை நொடிப் பொழுதின் நேர அளவும், கண் இமைப்பதன் நேர அளவும் ஒரு மாத்திரை என்று சொல்லப்படும். இந்த அளவையை, எழுத் தொலிகளின் நேர அளவுக்கு அளவு கருவியாகக் கொண்டனர்.

எழுத்துக்களின் மாத்திரை:—

உயிர் நெடில், ஒரு எழுத்துக்கு இரண்டு மாத்திரை.
உயிர் மெய் நெடில், ஒரு எழுத்துக்கு இரண்டு மாத்திரை.
உயிர்க் குறில், ஒரு எழுத்துக்கு ஒரு மாத்திரை.
உயிர் மெய்க் குறில், ஒரு எழுத்துக்கு ஒரு மாத்திரை.
முற்றியல்உகரத்துக்கு, ஒரு மாத்திரை.
குற்றியல்உகரத்துக்கு, அரை மாத்திரை.
ஆய்த எழுத்துக்கு, அரை மாத்திரை.
மெய் எழுத்துள் ஒவ்வோர் எழுத்துக்கும் அரை மாத்திரை.

## 26. எழுத்துக்களை இசைக்கும் முறை:—

மாணவர்களே! நாம் தமிழராக இருந்தும் நம் முன்னே பெரியோர் பலருங்கூட எழுத்துக்களை இசைப்பதிலே தவறு படுகின்றார்கள்.

'ர' 'ற' என்னும் இரண்டு எழுத்துக்களைப் பலரும் பலவாறாக இசைக்கின்றனர். ஆனால் எழுத்துக்களை இப்படித்தான் இசைத்தல் வேண்டும் என நம் முன்னோர் வரையறுத்துள்ளார்.

'ர்' என்பது இடையின மெய் எழுத்து. இதனை விரைவாக இழுத்தும், அல்லது பைய இழுத்தும் இசைக்

காமல், அவற்றின் இடை நிகர்த்ததாக இசைத்தல் வேண்டும். அப்படி இசைக்கும்போது மேல்வாயை நுனி நாவானது தடவுதலும் வேண்டும் என்று உணர்ந்து கொள்வீர்களாக.

'ற்' என்பது வல்லின மெய் எழுத்து. ஆனபடியால் அதனை இசைக்கும் போது விரைவாக அழுத்துதலும் மேல்வாயை நுனி நாக்கானது மிகப் பொருந்துதலும் வேண்டும்.

'ழ்','ள்' என்பவை இடையினமெய் எழுத்துக்கள் ஆதலால் அவற்றை இடைநிகர்த்தனவாக இழுத்து அழுங்கியும், 'ழ்' என்பதை இசைக்கும்போது, மேல்வாயை நுனி நாக்கானது பெருத்துத் தடவுதலும், 'ள்' என்பதை இசைக்கும்போது மேல்வாயைச் சும்மா நுனி நாக்கானது தடவுதலும் வேண்டும்.

எழுத்துக்களை இசைக்கும்போது இன்னும் பல நிகழ்ச்சிகளையும் கருதுதல் வேண்டும். அவற்றை எல்லாம் இனிமேற் கற்றுக் கொள்க.

எழுத்து இலக்கணம் நிறைவேறியது.

## இரண்டாவது
# சொல் - இலக்கணம்

## 27. சொல்:—

ஓர் எழுத்தேனும், இரண்டு முதலிய பல எழுத்துக்கள் ஒன்றுகூடியேனும் பொருளை அறிவித்தால் அது சொல் எனப்படும். பொருளையறிவியாதபோது அவை தனித்திருப்பினும், பல ஒன்றுகூடியிருப்பினும் சொல் ஆகாவாம். அவை எழுத்துக்களே யாகும்.

உதாரணம்:—

ஈ, (இலையான்) ஆறு, முரசு, விலங்கு, புழுங்கல், யாழ்ப்பாணம். இவை எல்லாம் பொருளை உணர்த்தி நிற்றலால் சொற்களேயாம்.

மு, டுறு, கோமல, ஞுங்லா, ஙேளகிடபதே, என்பன பொருள் உணர்த்தாமையின் சொற்கள் ஆகாவாம்.

சொல்லின் இயல்புகளைக் கூறும் பகுதி சொல் இலக்கணம் எனப்படும்.

## 28. சொற்களின் வகை:—

சொல்லானது,

1. "பொருளைக்குறிக்குஞ் சொல்" எனவும்,
2. "பொருளைப்பற்றி ஏதேனும் பேசுவதைக் குறிக்கும் சொல்" எனவும் இரண்டுவகைப்படும்.

1. பொருளைக்குறிக்கும் சொல் **"பெயர்ச் சொல்"** எனவும்,
2. பொருளைப்பற்றி ஏதாவது பேசுவதைக் குறிக்கும் சொல் **"வினைச் சொல்"** எனவும் பெயர் பெறும்.

உதாரணம் :— மரம், பனை, வேலி, மார்கழி, கண், } பெயர்ச் சொற்கள்.

(அவன்) வந்தான், (அவர்) பெரியர் } வினைச் சொற்கள்.

சுட்டு எழுத்து, வினா எழுத்துக்களைப் போன்று, பெயர்ச் சொல்லும் வினைச்சொல்லும் ஆகாமல் அவற்றோடு சார்ந்து வரும் ஒரு வகைச் சொல்லும் உண்டு. அஃது **"இடைச் சொல்"** எனப்படும்.

உதாரணம் :— "மற்று"

வந்தான் **"என்று"** சொன்னான் என்னும் சொல் தொடரிலே **"என்று"** என்னும் சொல், ஒரு பொருளுக்குப் பெயரும் ஆகாமல், அன்றி வினையும் ஆகாமல் வந்தான் சொன்னான் என்னும் இரண்டு சொற்களின் பொருளைப் புலப்படுத்தி நின்றமை காண்க.

இடைச்சொல்லைப் போலவே **"உரிச்சொல்"** எனவும் ஒரு சொல் உண்டு.

உதாரணம் :- இவள் **"நனி"** பேதை. (நனி = மிக) இதில் நனி என்பது உரிச்சொல். அது பேதையின் மிகுதியை விளக்கி நின்றது.

பொருளின் இயல்பும், தொழிலின் இயல்பும் தனித் தனியே இருப்பதை உணர்த்துவது உரிச்சொல் என இப்போது ஒருவாறு உணர்ந்து கொள்க.

எனவே சொற்கள்,

1. பெயர்ச் சொல்,
2. வினைச்சொல்,

3. இடைச்சொல்,

4. உரிச் சொல்

என நான்கு வகைப்படும் என அறிந்துகொள்க.

பயிற்சி வினாக்கள்:—

1. சொல்லாவது யாது?

2. சொல் எத்தனை வகைப்படும்?

3. அவை யாவை?

## 29. பெயர்ச் சொல்:—

(அ) பெயர்ச் சொல் பொருளுக்கும் பெயராக வரும்.
உ-ம். முருகன், காப்பு, பறவை, மக்கள்.

(ஆ) பெயர்ச் சொல் இடத்துக்கும் பெயராக வரும்.
உ-ம். நாடு, ஊர், பட்டினம், வீடு.

(இ) பெயர்ச் சொல் காலத்துக்கும் பெயராக வரும்.
உ-ம். ஆண்டு, திங்கள் (மாதம்), கிழமை, பகல், இரவு.

(ஈ) பெயர்ச்சொல் சினைக்கும் (உறுப்புக்கும்) பெயராக வரும்.

உ-ம். கை, கூந்தல், கிளை, இலை, வேர்.

(உ) பெயர்ச்சொல் குணத்துக்கும் பெயராக வரும்.
உ-ம். நன்மை, பசுமை, அன்பு, இரக்கம் உண்மை.

(ஊ) பெயர்ச்சொல் தொழிலுக்கும் பெயராக வரும்.
உ-ம். போக்கு, வரவு, செலவு, தருகை, எழுதல்.

7. பயிற்சி வினுக்கள்:—

1. பெயர்ச்சொல் எவ்வெவற்றிற்குப் பெயராக வரும்?

2. நேற்று, நாளை, திருநெல்வேலி, பொன், மூக்கு, மலை, கறுப்பு, கொடுமை, மாலை, காலை, நடை, கொடை, கணக்கு, தலை, இவை எவ்வெப் பெயர்களைச் சார்ந்தன?

பெயர்ச் சொற்களைக் கொண்டு

திணை,
பால்,
எண்,
இடம்,
வேற்றுமை

என்னும் ஐந்திணையும் அறிந்து கொள்ளலாம்.

## 30. திணை:—

திணை என்பது நிலை. எல்லாப் பொருள்களையும் இலக்கணநூலார், இரண்டு நிலை உடையனவாகப் பகுத்துக்கொண்டார்கள்.

## 31. திணையின் இரண்டுவகைப் பகுப்புக்கள்:—

திணை

உயர்திணை எனவும்,

அல்திணை (அஃறிணை) எனவும்

இரண்டுவகைப்படும்.

## 32. உயர்திணை:—

பகுத்தறிவு, மானம் முதலாகிய உயர்ந்த அறிவு உடைய மக்களும் (மனிதர்), மக்களினும் மேம்பட்ட

தேவர்களும், மக்களினும் தாழ்ந்த (நரக உலகில்உள்ள) நரகர்களும் உயர்திணையுள் அடங்குவர்.

மக்கள், புண்ணிய பாவம் இரண்டினையும் உடையர். இவ்விரண்டினுள்ளே பாவம் இலராய்ப் புண்ணியமே உடைய மக்கள் தேவர் உலகத்திலே தேவராகப் பிறப்பர். புண்ணியம் அற்றவராய்ப் பாவம் ஒன்றனையே கொண்டவர்கள், நரக உலகில் நரகராய்ப் பிறப்பர் என அறிந்துகொள்க.

33. அஃறிணை (அல் + திணை):—

அறிவின் உயர்வுக்கு உரியன ஆகாத உயிர் உள்ள பொருள்களும், உயிர் இல்லாத பொருள்களும் அஃறிணையில் அடங்கும்.

விலங்கு, பறவை, ஊர்வன, நீந்துவன, நிற்பன என்னும் உயிர்ப் பொருள்களும், நிலம், மலை முதலா உள்ள உயிர் இல்லாத பொருள்களும் இதன்கண் அடங்கும்.

உதாரணம்: — யானை, காகம், புழு, மீன், மரம், நிலம்.

பெயர்கள் திணைவகையால்
உயர்திணைப் பெயர்,
அஃறிணைப் பெயர்

என இரண்டுவகைப் பட்டவாறு உணர்ந்துகொள்க.

34. பால்:—

பால் என்பது பகுப்பு (பகுதி). உயர்ந்த நிலைப் பொருள்களையும், அஃது அல்லாத நிலையுடைய பொருள்

களையும் அவ்வவற்றின் நிலைமைக்கு ஏற்கும்படி பிரிக்கப் பட்ட பகுப்பு.

உயர்திணைப் பொருள்கள்,

ஆண்பால்,
பெண்பால்,
பலர்பால்

என மூன்று பகுப்புகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.

உயர்திணைக்கு உரியவர், செய்யத்தக்கன செய்யத் தகாதன என வரையறுக்கும் அறம், அறத்துக்கு மாறு பட்டமறம், தேசாபிமானம், தெய்வாபிமானம், உயிர் உடல் பொருள் ஆதிய எல்லாவற்றையும் பிறர்க்கு உதவும் கோடை, முதலாகிய குணம் செய்கைகளை உடைய உயர்ந்த நிலையினர் ஆதலால், அவர்க்கு ஆண் பகுப்பு, பெண்பகுப்பு, பலராகிய பகுப்பு என்னும் இவை இன்றி அமையாதன ஆயின.

35. (உயர்திணை) ஆண்பால்:—

ஓர் ஆண்மகன் என்னும் பகுப்பினைக் குறிப்பது ஆண்பால் எனப்படும்.

ஆண்பாற் பெயர்களின் இறுதி, **அன், ஆன், மன்.** **மான், ன்** என்னும் உறுப்புக்களுள் ஒன்றினைப் பெற்று வரும். சொல்லின் இறுதி உறுப்பினை **விகுதி** அல்லது **இறுதிநிலை** என்று கூறுவர்.

உதாரணம்:— ஆண்பாற் பெயர்.

(அ) பொன்னன் : (பொன் + அன்) 'அன்' விகுதிபெற்றது.
(ஆ) ஊரான் : (ஊர் + ஆன்) 'ஆன்' விகுதிபெற்றது.
(இ) வடமன் : வடக்கு + மன் ) 'மன்' விகுதிபெற்றது.
(ஈ) சேரமான் : (சேரர் + மான் ) 'மான்' விகுதிபெற்றது.
(உ) பிறன் : (பிற + ன் ) 'ன்' விகுதிபெற்றது.

## 36. (உயர்திணைப்) பெண்பால்:—

ஒரு பெண்மகளைக் குறித்து வரும் பகுப்பானது, பெண்பால் எனப்படும்.

பெண்பாற் பெயர்களின் இறுதி, **அள், ஆள், ள், இ** என்னும் விகுதிகளுள் ஒன்றினைப் பெற்று வரும்.

உதாரணம்:— பெண்பாற் பெயர்

(அ) மூக்கள் (மூக்கு + அள்) 'அள்' விகுதி பெற்றது.
(ஆ) கூந்தலாள் (கூந்தல் + ஆள்) 'ஆள்' விகுதி பெற்றது.
(இ) பிறள் (பிற + ள் ) 'ள்' விகுதி பெற்றது.
(ஈ) பொன்னி (பொன் + இ ) 'இ' விகுதி பெற்றது.

## 37. (உயர்திணைப்) பலர்பால்:—

இருவரும் இருவர்க்கு மேற்பட்டோரும் ஆகிய ஆண்மக்களும், இருவரும் இருவர்க்கு மேற்பட்டோருமாகிய பெண்களும், ஆடவரும் பெண்களும் சார்ந்த இருவரும் இருவர்க்கு மேற்பட்டோரும் ஆகிய அவ்விரு வகையோரும் பலர்பாலுள் அடங்குவர்.

பலர் பாற் பெயர்களின் இறுதி, அர், ஆர், மார், ர், கள் என்னும் விகுதிகளுள் ஒன்றனைப் பெற்று வரும்.

உதாரணம்:— பலர்பாற் பெயர்

(அ) கணக்கர் (கணக்கு + அர்) 'அர்' என்னும் விகுதிபெற்றது.
(ஆ) ஊரார் (ஊர் + ஆர்) 'ஆர்' என்னும் விகுதிபெற்றது.
(இ) மங்கைமார் (மங்கை + மார்) 'மார்' என்னும் விகுதிபெற்றது.
(ஈ) பிறர் (பிற + ர்) 'ர்' என்னும் விகுதிபெற்றது.
(உ) ஆட்கள் (ஆள் + கள்) 'கள்' என்னும் விகுதிபெற்றது.

அஃறிணைப் பொருள்கள்,

ஒன்றன்பால்,

பலவின்பால்

என இரண்டு பகுப்புக்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

அஃறிணைக்கு உரிய பொருள்கள் இடத்தே, மானம் உடைமை, மணமுறை நோக்குதல் தெய்வம் பேணுதல் முதலிய பகுத்தறியும் அறிவு இன்மையால் யானை, பறவை, முதலாகிய உயிர்ப்பொருள்களை ஆண் பெண் எனப் பகுப்பதால் பயனில்லை எனக்கண்ட பெரியோர், அத்தகைய உயிர்ப்பொருளும், மரம் முதலாகிய உயிர்ப்பொருளும் நிலம், மலை முதலாகிய உயிரில்லாத பொருளும் ஆகிய அவற்றையெல்லாம் ஆண் பெண் எனப் பகுக்கார் ஆயினர்.

**38 (அஃறிணை) ஒன்றன்பால்:—**

அஃறிணையுள் ஒரு பொருளைக் குறிப்பது ஒன்றன் பால் எனப்படும்.

ஒன்றன்பால் ஒன்றுக்குரிய பகுதி.

ஒன்றன்பாற் பெயர்களின் இறுதி, து என்னும் விகுதியைப் பெற்றுவரும்.

உதாரணம்:— **ஒன்றன்பால் பெயர்**

(அ) மூக்கது(மூக்கு + அ + து)‘து’ என்னும்விகுதிபெற்றது.
(ஆ) அது (அ + து ) ‘து’ என்னும் விகுதி பெற்றது.

**39. அஃறிணைப் பலவின்பால்:—**

ஒன்றுக்கு மேற்பட்ட அஃறிணைப் பொருள்களின் பகுப்புப் பலவின்பால் எனப்படும்.

அஃறிணைப் பலவின் பால் பெயர்களின் இறுதி அ, வை, கள், என்னும் விகுதிகளுள் ஒன்றனைப் பெற்று வரும்.

உதாரணம்:— **பலவின்பாற் பெயர்**

(அ) மூக்க: (மூக்கு + அ) ‘அ’ என்னும் விகுதி பெற்றது.
(ஆ) அவை: (அ + வை) ‘வை’ என்னும் விகுதிபெற்றது.
(இ) மரங்கள்(மரம் + கள்) ‘கள்’ என்னும் விகுதிபெற்றது.

**40. எண்:—**

பொருள் ஒன்றா? அன்றிப் பலவா? என்பதைக் காட்டுவது எண் எனப்படும். எண்ணிக்கையால் அளப்பதால் இஃது “எண்ணல் அளவை” எனவும் பெயர் பெறும்.

## 41. எண்ணின் வகை —

பொருள் ஒன்ருக இருப்பின் அஃது **ஒருமை** எண் எனவும், இரண்டாகவும் இரண்டிற்கு மேற்பட்ட பலவாகவும் இருப்பின் அவை **பன்மை** எண் எனவும் கூறப்படும்.

ஒருமை = பொருள் ஒன்ருக இருக்கும் தன்மை.
பன்மை = பொருள் (ஒன்றுக்கு மேற்பட்ட) பலவாக இருக்கும் தன்மை.

ஒருமை = ஒன்று + மை.
பன்மை = பல் + மை.

ஒருமை எண் என்பது, ஒன்று என்பதையும், பன்மை எண் என்பது பல என்பதையும், குறிக்கும்.

## 42, திணையும் எண்ணும்:—

உயர்திணையிலே, ஆண்பால் பெண்பால் என்னும் இரண்டு ஒருமையும், பலர்பால் என்னும் ஒரு பன்மையும்,

அஃறிணையிலே ஒன்றன்பால் என்னும் ஓர் ஒருமையும், பலவின்பால் என்னும் ஒரு பன்மையும் உண்டு.

உதாரணம்:—

| | | | |
|---|---|---|---|
| அரசன் | உயர்திணை | ஆண்பால் | ஒருமை |
| அரசி | உயர்திணைப் | பெண்பால் | ஒருமை |
| மனைவியர் | உயர்திணைப் | பெண்பலர்ப் | பன்மை |
| கணவர்கள் | உயர்திணை | ஆண்பலர்ப் | பன்மை |
| மக்கள் | உயர்திணை | ஆண் / பெண் பலர் | பன்மை |

அது: அஃறிணை ஒன்றன்பால் ஒருமை.
அவை: அஃறிணைப் பலவின்பால் பன்மை.

குறிப்பு: ஒருமை:—

| | | |
|---|---|---|
| உயர்திணையுள் | ஆண்பால் | என மூன்றும் ஒருமைஎண். |
| | பெண்பால் | |
| அஃறிணையுள் | ஒன்றன்பால் | |

குறிப்பு: பன்மை:—

| | | |
|---|---|---|
| உயர்திணையுள் | பலர்பால் | என இரண்டும் பன்மைஎண். |
| அஃறிணையுள் | பலவின்பால் | |

குறிப்பு:—

பலர்-பால் = பலரையும் கொண்ட பகுதி.
பல-இன்-பால் = பலவற்றையும் கொண்ட பகுதி.

## 43. இடம்:—

அருளன் என்பவன் பெரியவனோடு பேசத்தொடங்கி **நான்** உன்னை எதிர் நோக்கிக் காத்திருந்தேன்; நீயும் வந்துவிட்டாய் என்று சொன்னான். இங்கே பெரியவனோடு பேசத்தொடங்கிய அருளன் தன்னை **நான்** என்று கூறிக்கொள்கிறான். தான் பேசியதை முன்னர் நின்று கேட்டுக்கொண்டு இருக்கும் பெரியவனை நீ என்று குறிப்பிடுகிறான்.

அருளன் பெரியவனிடம் "முத்தன் இப்போது எங்குளான்" என்று கேட்க, "அவன் வீட்டிலுள்ளான்" என்று பெரியவன் அருளனுக்குச் சொன்னான். அப்போது அருளன் "நான் அவனைப் பார்க்கவேண்டும்" என்றான்.

இங்கே அருளனாலும் பெரியவனாலும் பேசப்பட்ட முத்தன், அவ்விருவராலும் **அவன்** என்று குறிப்பிடப்பட்டான்.

பேசுவோன் தன்னைக் குறிப்பிடும்இடம் **தன்மை இடம்** என்றும்,

அப் பேசுவோனுடைய முன்னால் நிலை பெற்று நின்று கேட்பதைக் குறிப்பிடும் இடம் **முன்னிலை இடம்** என்றும்,

அவர்களால் பேசப்பட்டவன் எவனோ அவனைக் குறிக்கும் இடம் **படர்க்கை இடம்** என்றும் சொல்லப்படும்.

எல்லாப் பெயர்களும் இந்த மூன்றிடங்களில் அடங்கும்.

## 44. தன்மைப் பெயர்:—

தன்மைப் பெயர்

1. தன்மை ஒருமைப் பெயர்,
2. தன்மைப் பன்மைப் பெயர்

என இருவகைப்படும்.

1. தன்மை ஒருமைப் பெயர்:-
நான், யான் என்பன தன்மை ஒருமைப் பெயர்கள்.

2. தன்மைப் பன்மைப் பெயர்:-
நாம், நாங்கள், யாம், யாங்கள், என்பன தன்மைப் பன்மைப் பெயர்கள்.

## 45. முன்னிலைப் (முன் + நிலை) பெயர்:—

முன்னிலைப் பெயர்,

1. முன்னிலை ஒருமைப் பெயர்,
2. முன்னிலைப் பன்மைப் பெயர்

என இரண்டு வகைப்படும்.

முன்—நிலைப்பெயர் = (பேசும்தனக்கு) முன் (இடத்திலே) நிலைத்து (இருக்கும்) பெயர்.

1. முன்னிலை ஒருமைப் பெயர்:—

நீ என்னும் ஒரு பெயரே முன்னிலை ஒருமைப் பெயராகும்.

2. முன்னிலைப் பன்மைப் பெயர்:—

நீவிர், நீயிர், நீர், நீங்கள், எல்லீர் (உம்) என்னும் ஐந்து பெயர்களும் முன்னிலைப் பன்மைப்பெயராம்.

குறிப்பு:— எல்லீர் என்பது வாக்கியத்திலே வரும்போது எல்லீநும் என உம் பெற்று வரும்.

உதாரணம்: எல்லீநும் வந்தீரோ!

## 46. படர்க்கைப் பெயர்:—

தன்மைப் பெயர்களும் முன்னிலைப் பெயர்களும் ஒழிந்த எல்லாப் பெயர்களும் படர்க்கைப் பெயர்களாம்.

ஆடவர்கள், பெண்கள், மக்கள், கறுத்தது, அது, அவை, புள்ளியன முதலாயின எல்லாம் படர்க்கைப் பெயர்களாம்.

படர்க்கைப்பெயர்,

1. ஆண்பாற் பெயர்,
2. பெண்பாற் பெயர்,
3. பலர்பாற் பெயர்,
4. ஒன்றன்பாற்பெயர்,
5. பலவின்பாற் பெயர்

என ஐந்து வகைப்படும்.

உதாரணம்:—

மூக்கினன், அவன், எவன் முதலாயினவெல்லாம் படர்க்கை ஆண்பாற்பெயர். கண்ணம்மாள், அவள், எவள் முதலாயினவெல்லாம் படர்க்கைப் பெண்பாற் பெயர். ஆடவர், பெண்கள், மக்கள், அவர், எவர் முதலாயினவெல்லாம் படர்க்கைப் பலபாற் பெயர்.

கறத்தது, அது, முதலாயின எல்லாம் படர்க்கை ஒன்றன் பால் பெயர்.

புள்ளியன, அவை முதலாயினஎல்லாம் படர்க்கைப் பலவின் பால் பெயர்.

குறிப்பு:—

'படர்கை' என்பது, நினைத்தல் என்னும் பொருளைத் தருவது. படர்க்கை என்பது நினைக்கப்படுதல் என்னும் பொருளைத்தருவது. எனவே படர்கை ஆவது, தன்மை இடத்துப் பொருளாலும், முன்னிலை இடத்துப் பொருளாலும் நினைக்கப்படும் இடத்துக்கு உரிய பொருளாம்.

8. பயிற்சி வினாக்கள்:—

1. திணை எத்தனை வகைப்படும்? அவை எவை?
2. திணை எவ்வாறு வரையறுக்கப்பட்டது?
3. பால் எத்தனைவகைப்படும்? அவை எவை?
4. பெயர்ச் சொற்களில் பால் எதனால் அறியப்படும்?
5. எண்ணாவது யாது?
6. எண்ணின் பகுப்புக்கள் தோன்ற உதாரணம்கூறு.
7. இடம் எத்தனைவகை? அவையாவை? உதாரணம்கூறு.

8. பெயர்ச் சொற்களைத் திணை வகையால் எப்படிப்பிரிக்கலாம்? இடவகையால் எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? உதாரணம் கூறுக.
9. ஆண்பால், தன்மைஒருமை, பலர்பால் பெயர்கள் சில கூறுக.
10. படர்க்கை யாவதயாது?

**47. வேற்றுமை:—**

பெயர்ச்சொற்கள், வாக்கியங்களிலே நிற்கும் நிலையைப் புலப்படுத்துவதே வேற்றுமை எனப்படும்.

இராமன்
கந்தன்
புத்தகம்

இராமன் ஒரு புத்தகத்தை (வாங்கிக்) கந்தனுக்குக் கொடுத்தான்)

மேலே காட்டப்பட்ட பெயர்ச் சொற்கள், வாக்கியத்தில் வேறுபட்டிருத்தலைக் காண்க.

இராமன் என்பது, வாங்கிக் கொடுத்தவனாக வேறுபட்டது; புத்தகம் அவ்விராமனால் வாங்கப்பட்டதாக வேறுபட்டது; கந்தன் என்பது, புத்தகத்தை ஏற்றுக் கொண்டபொருளாக வேறுபட்டது.

முன்னர் சும்மா இருந்த இராமன், கந்தன், புத்தகம் என்னும் பெயர்ச் சொற்கள், வேறுபட்டிருந்த தன்மையைப் பார்த்ீர்களா?

இந்த வேற்றுமைகள்,

முதலாம் வேற்றுமை,
இரண்டாம் வேற்றுமை,
மூன்றும் வேற்றுமை,
நாலாம் வேற்றுமை,
ஐந்தாம் வேற்றுமை,
ஆறும் வேற்றுமை,
ஏழாம் வேற்றுமை,
எட்டாம் வேற்றுமை

என எட்டு வகைப்படும்.

**48. முதலாம் வேற்றுமை:—**

இது, வாக்கியத்தில் தலைமைப் பொருளில் 'இது செய்தது' எனவரும். இதனைக் கருத்தாப் பொருள் என்பர்.

'மரம் புரிந்தது' இங்கே மரம் என்பது தலைமைப் பொருளில் வந்தது. அது, எழுவாய் அல்லது கருத்தா எனப்பட்டது. இதை முதலாம் வேற்றுமை எனவும் கூறுவர். இங்கே புரிந்தது என்பதில்தான் தலைமைப் பொருள் நிலை பெறுகின்றது. இதுவே பயனிலை. இத் தலைமைப் பொருள், பெயர், வினை, வினு என்னும் மூன்றையும் பயனிலையாகக் கொள்ளும்.

உதாரணம்:—

அது மரம் (பெயர்ப் பயனிலை கொண்டது)
கந்தன் வந்தான் (வினைப் பயனிலை கொண்டது)
அவை யாவை? (வினுப் பயனிலை கொண்டது)

**49. இரண்டாம் வேற்றுமை.—**

இது கருத்தாவினற் செய்யப்பட்ட பயனைக் கொள்ளும் பொருளில் வரும். அதாவது பயனிலையை 'யாரை' என வினவும் வினவுக்கு விடையாக வரும்.

யான் 'கந்தனைக் கண்டேன்' இங்கே பயனிலை கண்டேன் என்பதன்றே? அப்பயனிலையை யாரைக்கண்டேன்? என வினவ கந்தனை என்னும் விடை புலப்படுகிறது. ஆகையினல் கந்தன் என்பது செயப்படுபொருளாகும்.

இந்தச் செயப்படு பொருளைப் புலப்படுத்தப் பெயரின் இறுதியிலே 'ஐ' என்பது வரும். இப்படிப் பெயரின் இறுதியில் அதன் வேறுபாட்டைக் காட்டவரும் சொல்லை 'வேற்றுமை உருபு' என்பர். நான் கல்வி'ஐ'க் கற்றேன் எனவருவது காண்க.

உதாரணம்:—

(அ) வீட்டைக் கட்டினன்;
(ஆ) புல்லை மேய்ந்தது;
(இ) ஊரை அடைந்தான்;
(ஈ) கள்ளரை நீக்கினன்;
(உ) புலியை ஒத்தான்;
(ஊ) பொன்னை உடையான்.

குறிப்பு:—

முதலாம் வேற்றுமைக்கு, இவ்விரண்டாம் வேற்றுமைக்கு வரும் 'ஐ' என்பதைப் போன்ற தனித்த உருபு இல்லை. அந்தத் தலைமைப் பொருளைக் காட்டும் பெயரே உருபாகும்.

6

வாக்கியங்களில் வரும் வேற்றுமையடைந்த பெயர்ச் சொல் 'ஐ' என்னும் உருபோடு சேர்ந்தும், சேராமல் மறைந்தும் வரும். உருபோடு வருவது வேற்றுமை விரி எனவும், மறைந்து வருவது வேற்றுமைத் தொகை எனவும் கூறப்படும்.

உதாரணம்:—

ஊரை அடைந்தான். (வேற்றுமை விரி)
ஊர் அடைந்தான். (வேற்றுமைத்தொகை)

முதலாம் வேற்றுமைக்குத் தனித்த வேறு உருபு இன்மையால் அது தொகையாகாது விரியாகவே வரும்.

'நான் வந்தேன்' என்பதை 'வந்தேன்' எனக் கூறுவதும் உண்டு. இப்பயனிலைக்குரிய எழுவாயைத் தோன்றா எழுவாய் என்பர். தொகையானது இரண்டு சொற்களின் இடையிலேதான் வரும். ஒரு சொல்மட்டும் தொகையாகாது. 'வந்தேன்' என்பது ஒரு சொல். ஆதலால் அது தொகையாகாது.

இரண்டாம் வேற்றுமை வினைச் சொற்களைக் கொண்டுமுடியும்.

உதாரணம்:- 'இராமன் கந்தனை அடித்து விட்டு வீட்டுக்குள் மறைந்தான்'

இந்த வாக்கியத்தில், 'மறைந்தான்' என்பது பயனிலை. இப்படிப் பொருளை முடிக்கும் நிலையுடைய சொல்லைப் பயனிலை என்பர். 'அடித்து' என்னும் சொல்லால் பொருளும் வாக்கியமும் முடியாவாம்.

இப்படி வாக்கியத்தின் பொருளை முடியாமல், வேற்றுமையை முடிக்க வரும் சொல்லை முடிக்கும் சொல் என்பர்.

[இந்தமுடிக்கும் சொல்லை மேல்வகுப்புக்களில் விபரமாக அறிந்து கொள்ளலாம்]

## 50. மூன்றும் வேற்றுமை:—

முடிக்கும் சொல்லையாதல், பயனிலையையாதல் எதனால் எதனோடு என வினவ, இதனால் இதனோடு என்னும் பொருளில் விடையாக வருவது மூன்றும் வேற்றுமை.

1. எதனால் என்னும் பொருள் வருமாறு:—
   'கந்தன் கத்தியால் மரத்தை வெட்டினான்'

வினா:— எதனால் வெட்டினான்?
விடை:- கத்தியால் வெட்டினான்.

இந்தப் பொருளைக் காரணப் பொருள் என்பர். இதற்கு 'ஆல்' என்பது உருபு.

(அ) மரத்தாற் பெட்டியைச் செய்தான்.
(ஆ) உளியாற் பெட்டியைச் செய்தான்.
(இ) தச்சனால் பெட்டி செய்யப்பட்டது.

ஆல் உருபுக்குப் பதிலாக "கொண்டு" என்பது சொல்லுருபாக வரும். உளி கொண்டு பெட்டியைச் செய்தான்.

இப்படி உருபுக்குப் பதிலாக வரும் சொல்லைச் "சொல்லுருபு" என்பர்.

குறிப்பு:— முதலாம் வேற்றுமைக்கு ஆனவன், ஆகின்றவன், ஆபவன் என்ற சொல்லுருபுகள் உண்டு.

உதாரணம்:—

இராமன் ஆனவன் வந்தான்.
கந்தன் ஆகின்றவன் படிக்கிறான்.
மரம் ஆனது (ஆகின்றது, ஆவது) வளரும்.

2. எதனோடு என்னும் பொருள் வருமாறு:—
அண்ணனோடு தம்பி வந்தான். (ஒடு)
தாயோடு மகன் வந்தான். (ஓடு)

அண்ணனொடு தம்பிவந்தான் என்னும்போது, அண்ணனுக்கும் தம்பிக்கும் உடனிகழும் தொழிற்பொருளை உணர்த்துவது ஒடு, ஓடு என்னும் உருபுகளாம். இதன் பொருள் உடனிகழ்ச்சிப் பொருளாம்.

ஒடு ஓடு உருபுகட்குப் பதிலாக **உடன்** என்னும் சொல்லுருபு வருவது உண்டு.

உதாரணம்:- தந்தை உடன் மகன் வந்தான்

தொகையும் விரியும்:-
அம்பு எய்தான் (வேற்றுமைத் தொகை)
அம்பால் எய்தான். (வேற்றுமை விரி)
ஒடு, ஓடு உருபுகள் தொகையாக வாராவாம்.
இவ்வேற்றுமை வினை கொண்டு முடியும்.

உதாரணம்:- வாளால் வெட்டினான்.

**51. நாலாம் வேற்றுமை:—**

இதற்கு உருபு 'கு' என்பது. ஏதேனும் ஒன்றை ஏற்றுக் கொள்ளும் பொருளில் வரும்.

உதாரணம்:—

(அ) கந்தனுக்குக் காணியைக் கொடுத்தான்.
இங்கேகந்தன் காணியை ஏற்றுக்கொண்டவனானான்.

(ஆ) எலிக்குப் பகை பூனை.
பூனையின் பகையை எலி ஏற்றுக்கொண்டது.

(இ) குகனுக்கு நண்பன் இராமன்.
குகன் நட்பை இராமன் ஏற்றுக்கொண்டான்.

(ஈ) வேளாளர்க்கு உரியது கலப்பை.
வேளாளர் கலப்பையின் உரிமையை ஏற்றுக் கொண்டார்.

(உ) பெட்டிக்கு மரம்.
மரத்தைப் பெட்டி காரணமாக ஏற்றுக்கொண்டது

(ஊ) கூலியின் பொருட்டு வேலை செய்தான்.
வேலை செய்தலைக் கூலி ஏற்றுக்கொண்டது.

(எ) இராமனுக்குத் தம்பி பரதன்.
பரதனுக்கு அண்ணன் இராமன்
சீதைக்குத் தகப்பன் ஜனகன்,

தம்பி, தமையன், தகப்பன், என்னும் முறைகளை இராமன் பரதன், சீதை என்போர் ஏற்றுக் கொண்டனர்

(ஏ) வீட்டுக்கு வடக்குத் தெரு.
வீடு, தெருவை எல்லையாக ஏற்றுக் கொண்டது.

சொல்லுருபு:—

கூலியின் பொருட்டு வேலை
கூலிக்கு ஆக வேலை

இவற்றில் வந்த பொருட்டு, ஆக என்பன சொல் லுருபுகளாம்.

தொகையும் விரியும்:—

கண்ணனுக்கு மகன் (வேற்றுமை விரி)
கண்ணன் மகன் (வேற்றுமைத் தொகை)

இந்த நாலாம் வேற்றுமை, வினை, பெயர் ஆகிய இரண்டையும் கொண்டு முடியும்.

உதாரணம்:—

கந்தனுக்குக் கொடுத்தான்
கூலிக்குச் செய்தான்
} என வினை கொண்டுமுடியும்.

கூலிக்கு வேலை
இராமனுக்கு நண்பன்
எலிக்குப் பகை
பெட்டிக்கு மரம்
வேளாளர்க்கு கலப்பை
} எனப் பெயர் கொண்டுமுடியும்.

## 52. ஐந்தாம் வேற்றுமை:—

இவ் வேற்றுமைக்கு **இல், இன்** என்பன உருபு களாம். **இது**, "இதுநீங்கிய நீக்கத்தை இது பெற்றது" என்னும் பொருளில் வரும். இதனை "நீக்கப் பொருள்" என்பர்.

உதாரணம்:—

(அ) பனையின் நீங்கிய பழம்.

இங்கே பழம்நீங்கிய நீக்கத்தைப் பனை பெறுகின்றது

(ஆ) என் மகன் குற்றி இன் தோற்றினுன்.
(முந்திக் குற்றிபோல் தோன்றினவன், அதினின்றும் நீங்கி மகன் தன்மையை அடைந்தான்) நீங்கினவன் மகன்; அந்நீக்கத்தைப் பெற்றது ஆகிய குற்றி ஒப்பாக (உவமையாக) வந்தது.

(இ) வீட்டின் வடக்குத் தோட்டம்.
தோட்டம் வீட்டிற்குள் அகப்படாது புறம்பே நீங்கியுள்ளது. அது நீங்கிய நீக்கத்தை வீடு எல்லையாகப் பெற்றது. இதனை எல்லைப்பொருள் என்பர்.

(உ) "கல்வியிற் பெரியன் கம்பன்"
என்றவிடத்து, ஏனைய புலவர்களுடைய பெருமை நீங்கியது; அந்நீக்கத்தைக் கல்வி பெற்றது; கம்பன் பெரியனதற்குக் கல்வி ஏதுவாயிற்று; ஏதுவாகிய கல்வியே நீக்கத்தைப் பெற்றமையின் இஃது ஏதுப்பொருளாயிற்று.

இவ்வேற்றுமையில் எல்லைப்பொருள் பெயரையும், ஏனையன வினையையும் கொண்டு முடியும்.

சால்லுருபு:—
இவ்வேற்றுமைக்கு நின்று, நின்றும், இருந்து, இருந்தும் என்பன சொல்லுருபுகளாக வரும்.

உதாரணம்:—

வீட்டில் நின்று நீங்கினுன்.
வீட்டில் நின்றும் நீங்கினுன்.
வீட்டில் இருந்து நீங்கினுன்.
வீட்டில் இருந்தும் நீங்கினுன்.

தொகையும் விரியும்:—

வீட்டின் வடக்கு (வேற்றுமை விரி)
வீட்டு வடக்கு (வேற்றுமைத் தொகை)

## 53. ஆறாம் வேற்றுமை:—

இவ்வேற்றுமைக்கு உருபு அது. ஆது என்றும் கூறுவர். இவ்வேற்றுமை, "இதனது இது" என்னும் பொருளில் வரும். இப்பொருள் தொடர்புப் பொருள் எனப்படும். [தொடர்புப் பொருள் = கிழமைப் பொருள், உரிமைப் பொருள்.]

பொன்னன் அது கை
எனது வீடு (என்து வீடு.)

இத்தொடர்புப் பொருள், ஒரு பொருளோடு வேறுபடாத தொடர்புடையபொருள், ஒரு பொருளோடு வேறுபட்ட தொடர்புடைய பொருள் என இரண்டுவகைப் படும்.

வேறுபடாத தொடர்பு தற்கிழமை எனவும்
வேறுபட்ட தொடர்பு பிறிதின் கிழமை எனவும் கூறப்படும்.

உதாரணம்:—

தற்கிழமைப் பொருள்:-

(அ) கந்தனது இளமை;
(ஆ) கந்தனது ஓட்டம்;
(இ) மரத்தினது கிளை;
(ஈ) காக்கையது கூட்டம்;
(உ) பறவையது கூட்டம்;
(ஊ) அரிசியது மா.

பிறிதின் கிழமைப் பொருள்:—

(அ) கந்தனது வீடு

(ஆ) அரசனது பெருநாள்

(இ) வேலனது மாடு

இவ் வேற்றுமை, பெயரைக் கொண்டே முடியும். (மேலே கூறப்பட்ட உதாரணங்களில் காண்க.)

இவ்வேற்றுமைக்கு **உடைய** என்பது சொல்லுருபாகும்.

உதாரணம்: அரசனுடைய அரண்மனை.

கண்ணனது வீடு (வேற்றுமை விரி)

கண்ணன் வீடு (வேற்றுமைத் தொகை)

**54.** ஏழாம் வேற்றுமை:—

இவ் வேற்றுமைக்கு உருபு **கண்** என்பதாகும். இவ் வேற்றுமை "இதன் கண் இது" என்னும் பொருளில் வரும்.

(அ) மணியின்கண் உள்ளது ஓசை } பொருள் இடம்.
மணியின்கண் உள்ளது நாக்கு

(ஆ) வீட்டின்கண் உள்ளது சுவர் } இடம் இடம்.
வீட்டின்கண் உள்ளது பெட்டி

(இ) கையின்கண் உள்ளது விரல் } சினை இடம்.
கையின்கண் உள்ளது மோதிரம்

(ஈ) இளமையின்கண் உள்ளது அழகு
இளமையின்கண் உள்ளது வறுமை } குணம் இடம்.

(உ) ஆட்டத்தின்கண் உள்ளது அசைவு
ஆட்டத்தின்கண் உள்ளது மத்தளம் } தொழில் இடம்.

(ஊ) கோடையின்கண் உள்ளது வெப்பம்
கோடையின்கண் பூப்பது மா. } காலம் இடம்.

இவ் வேழாம் வேற்றுமை பெயரையும் வினையையும் கொண்டு முடியும்.

உதாரணம்:—

மணியின் கண் ஒளி (பெயர் கொண்டது)
வீட்டின் கண் இருந்தான் (வினை கொண்டது)

ஏழாம் வேற்றுமைக்கு இல், உள், இடம், அகம், புறம், மேல், கீழ், புடை, (பக்கம்) என இடத்தை உணர்த்தும் சொற்கள் எல்லாம் சொல்லுருபுகளாக வரும்.

உதாரணம்:—

(அ) ஊரில் இருந்தான் (இல்)
(ஆ) கடலுள் மீன் (உள்)
(இ) கந்தனிடம் வந்தான் (இடம்)
(ஈ) ஊரினகத்தே கோயில் (அகம்)
(உ) நகரின் புறத்தே சுடுகாடு (புறம்)
(ஊ) தேர்மேல் இருந்தான் (மேல்)
(எ) மரத்தின்கீழ் இளைப்பாறினன் (கீழ்)
(ஏ) அரசன் புடையில் (பக்கத்தில்) மந்திரி (புடை)

வீட்டின் கண் புகுந்தான் (வேற்றுமை விரி)
வீடு புகுந்தான் (வேற்றுமைத் தொகை)

## 55. எட்டாம் வேற்றுமை:—

இது விளி வேற்றுமை என்றும் பெயர் பெறும். விளிவேற்றுமை = அழைக்கப்படும் வேற்றுமை; (விளித்தல் = அழைத்தல், கூப்பிடுதல்.)

இவ்வேற்றுமை ஒன்றை அழைத்து, இதைச் செய் என ஏவுதற் பொருளில் வரும். இதற்குத் தனித்த உருபு இல்லை. பெயர்கள் நடுவிலும் இறுதியிலும் வேறுபட்டும், வேறுபடாமலும் வருதலே இதற்கு உருபாம்.

உதாரணம்:—

(அ) தம்பீ! வா.
(ஆ) மகனே! படி.
(இ) இராம! கேள்.
} இறுதி வேறுபட்டன.

(உ) பிள்ளைகாள் நில்மின்
(ஊ) சுன்னாகத்தாய் வருக
} நடுவில் வேறுபட்டன.

(எ) கந்தன் போ } வேறுபடாது நின்றது.

இதுவும் முதலாம் வேற்றுமைபோல தொகையாக வராது. இவையிரண்டும் வெளிப்பார்வைக்கு ஒன்றுபோல இருப்பினும், உள்ளுக்குள் சில வேறுபாடு உடையன.

9. பயிற்சி வினாக்கள்:—

1. வேற்றுமை என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?
2. தலைமைப் பொருள் என்றால் என்ன? அஃது எந்த வேற்றுமைக்குரியது?
3. செய்யப்படு பொருளை உதாரணங்காட்டி விளக்குக.
4. மூன்றாம் வேற்றுமை உருபுகளையும், பொருளையும் கூறி அவற்றைத் தொடர்புபடுத்துக.
5. நாலாம் வேற்றுமைப்பொருள் எத்தனை வகைப்படும். அவை யாவை?
6. நீக்கப்பொருள், உரிமைப்பொருள், இவற்றை விளக்குக.
7. ஊரை அடைந்தான், ஊரின்கண் அடைந்தான் இவ்விரண்டு வாக்கியத்திலும் உள்ள பொருள் வேறுபாடு யாது?
8. பனை முறிந்தது; கந்தனால் அடிக்கப்பட்டான்; சோற்றை உண்டான்; பூனை பாய்ந்தது; கொடுக்கு அவிழ்ந்தது; அரசனுடைய தேவி; பூதனுடன் வேலன் போர்செய்தான் அறிவுக்காகப் படித்தான்; எசமானினின்றும் நீங்கினான்; மாம்பழத்தினது சுவை; தூதனைக்கொண்டு அறிந்தான்; யானை ஆனது பெரியது; நிலத்தின்மேல் நின்றான். இவ்வாக்கியங்களிலுள்ள உருபுகளையும், சொல்லுருபுகளையும், அவை எத்தனையாம் வேற்றுமைக்கு உரியன என்பதையும் கூறுக.
9. சந்திரன் ஒத்தமுகம்; பொன் ஆபரணம்; கந்தன் படித்தான்; மரக்கிளை; மாலைக்குப்பூ; வீடு அடைந்தான்; வறுமையின் நீங்கினான்; மந்திரி! கேள்; மரம்ஆனது ஒடிந்தது.

இவற்றிலுள்ள வேற்றுமைத் தொகைகளையும் வேற்றுமை விரிகளையும் கூறு.

## ii வினைச் சொல்

ஒரு பொருளைப் பற்றி ஏதாவது சொல்லும் சொல் வினைச் சோல் எனப்படும். வினைச்சொற்கள், "தெரிநிலை வினைச்சொற்கள்", "குறிப்பு வினைச்சொற்கள்" என இரண்டுவகைப்படும்.

### 56. தெரிநிலை வினைச் சொல்:—

தொழிலையும் காலத்தையும் நேரேகாட்டும் வினைச் சொல் தெரிநிலை வினைச்சோல் எனப்படும்.

உதாரணம்:—

கண்ணன் படித்தான் ('த்' இறந்தகாலம் காட்டியது)
கண்ணன் படிக்கிறன் ('கிறு' நிகழ்காலம் காட்டியது)
கண்ணன் படிப்பான் ('ப்' எதிர்காலம் காட்டியது)

குறிப்பு:— வினையின் இடையில் காலங்காட்டிவரும் உறுப்பை இடைநிலை என்பர்.

### 57. குறிப்பு வினைச் சொற்கள்:—

பொன்னன், பணக்காரன், பெரியவன், என்னும் இவை போன்ற பெயர்ச் சொற்கள்.

பொன்னை உடையவன் ஆனான்
பொன்னை உடையவன் ஆகின்றான்
பொன்னை உடையவன் ஆவான் எனவும்,
பணக்காரன் ஆனான்
பணக்காரன் ஆகின்றான்

| | | |
|---|---|---|
| பணக்காரன் | ஆவான் | எனவும், |
| பெரியவன் | ஆனான் | |
| பெரியவன் | ஆகின்றான் | |
| பெரியவன் | ஆவான் | எனவும் |

பக்கத்திலே தெரிநிலை வினைச்சொற்களை மறைத்துக் கொண்டு வரும். இவ்வாறு வருவதே குறிப்பு வினை எனப்படும்.

குறிப்பு:— பொன்னன் போன்றவை, ஒருபொருளின் பெயராய் வரும்போது பெயர்ச்சொல் எனப் படும். அதைப்பற்றி எதாவது பேசும்போது வினைச்சொல் எனப்படும். உதாரணத்தை மேலேபார்க்க.

## 58. தெரிநிலை வினைச் சொல்லின் வகை:—

தெரிநிலை வினைச்சொல், **தன்வினை**, **பிறவினை** என்னும் இரண்டிலும் வரும்.

**i தன்வினை:—**

கொற்றன் நடந்தான். இங்கே நடந்தவன் கொற்றன் ஆதலினால், அவன்தானே அதைச் செய்தவன் ஆகின்றான். தானே செய்யும் தொழிலை உணர்த்தும்வினை தன் வினை.

**ii பிறவினை:—**

சாந்தன் நடத்தினான். இங்கே, நடத்தலாகிய தொழிலைத் தான் செய்யாது, பிறி தொன்றனை நடக்கச் செய்தான். ஆதலால் இது பிறவினையாகும்.

உதாரணம்:—

நீ மகனைப் படிப்பித்தாய்.

அஃது அதனை ஓட்டியது.

| தன்வினை. | பிறவினை, |
| --- | --- |
| நடந்தான் | நடத்தினன் |
| உருண்டான் | உருட்டினன் |
| மருண்டான் | மருட்டினன் |
| செய்தான் | செய்வித்தான் |
| போனன் | போக்கினன் |
| எழுந்தான் | எழுப்பினன் |
| ஓடினன் | ஓட்டினன் |
| புகுந்தது | புகுத்தியது. |

எனவருதல் காண்க.

தெரிநிலை வினையில் **செய்வினை, செயப்பாட்டுவினை** என மேலும் இருவகை உண்டு,

iii செய்வினை:—

தன்வினையும், பிறவினையும் செய்வினை எனப்படும். உதாரணங்களை மேலே கண்டுகொள்ளுக.

iv செயப்பாட்டு வினை:—

"கண்ணன் குழலை ஊதினன்"

இங்கே கண்ணன் என்பது தலைமைப் பொருளில் வந்த முதல் வேற்றுமையாகும். குழல் என்பது செயப்படுபொருளில் வந்தது.

இந்த வாக்கியத்தை இன்னொருவகையாகவும் கூறலாம்.

"குழல் கண்ணனல் ஊதப்பட்டது"

முதல் வாக்கியத்தில் செயப்படுபொருளில் வரும் குழல், இங்கே தலைப்பொருளுக்குரிய முதல் வேற்றுமையில் வந்தது. முதல் வாக்கியத்தில் தலைமைப் பொருளாயிருந்த கண்ணன் என்பது, இங்கே, குழல் ஊதிய காரணத்தால் மூன்றும் வேற்றுமைப் பொருளில் வந்தது. இப்படி மாறி வருவதைக் காட்டப் 'படு' என்பது சேர்க்கப்படும். இரண்டாம்வேற்றுமை, முதல் வேற்றுமை ஆக, பயனிலை பட்டது, படுகின்றது, படும் என்னும் மூன்றனுள் ஒன்றுபெற்று வரும்.

தலைமைப் பொருள் மூன்றும் வேற்றுமையாக மாறச், செயப்படுபொருள் முதலாம் வேற்றுமையாக (தலைமைப்பொருளாக) மாறப்பெற்ற வினைச்சொல் செயப்பாட்டு வினை யாகும்.

இதுவேயும் அன்றி இவ்வினை முற்றுக்கள், செயப்படு பொருளைத் தன்னுள் மறைத்துக்கொள்வதாகிய செயப்படுபொருள் குன்றியவினை, வெளியே செயப்படு பொருளைக் காட்டும் செயப்படுபொருள் குன்றுதவினை எனவும் இரண்டு வகைப்படும்.

உதாரணம்:—

(அ) நான் வாடினேன்.

இங்கே வாடுதலைச் செய்தேன் எனச் செயப்படு பொருள் உள்ளே மறைந்து வந்திருக்கின்றது.

நடந்தான் } என்பவைகளும் அப்படியே.
ஓடினன் }

(ஆ) நான் சோற்றை உண்டேன்.

அவன் பொருளை ஈட்டினன்.

இங்குச் செயப்படுபொருள் வெளிப்பட்டுவந்த வாறு கண்டு கொள்க.

**10. பயிற்சி வினாக்கள்:—**

1. வினைச் சொல்லாவது யாது?

2. அஃது எத்தனை பெரும் பிரிவாகப் பிரிக்கப்படும்? அவை யாவை?

3. தெரிநிலைவினை, குறிப்புவினை, ஆகிய இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

4. தன்வினை, பிறவினை, செய்வினை, ஆகியமூன்றனையும் உதாரணங்காட்டி விளக்குக.

5. செயப்பாட்டு வினையாவது யாது?

6. செயப்படு பொருள் குன்றியவினை குன்றாதவினை ஆகிய இரண்டனையும் உதாரணமுகத்தால் விளக்குக.

7. சந்தன் மாய்ந்தான்; பூவை மலர்த்திற்று; வண்டுபாடும்; கோயில் கட்டப்பட்டது; பயிரை வளர்த்தான்; குதிரை ஓடிற்று; கூந்தல் வளர்ந்தது; இடியேறு வீழ்ந்தது;

இவற்றில் உள்ள தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை என்பவற்றையும் செயப்படுபொருள் குன்றியவினை, குன்றாதவினை என்பவற்றையும் எழுதுக.

**59. காலம்.—**

காலம்,

தொழில் நிறைவேறிய காலம் எனவும்,

தொழில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலம் எனவும்,

தொழில் இனிமேல் நடைபெறக்கூடிய காலம் எனவும்

மூன்று வகைப் படும்.

| | |
|---|---|
| தொழில் நிறைவேறிய காலம், | **இறந்தகாலம்.** |
| தொழில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காலம், | **நிகழ் காலம்.** |
| தொழில் இனிமேல் நடைபெறப் போகும் காலம், | **எதிர் காலம்.** |

தெரிநிலை வினைமுற்று இம்மூன்று காலத்தையும் வெளிப்படையாகக் காட்டும்.

புகு, தகு என 'கு' என்னும் எழுத்தின் முடிந்த இரண்டு குற்றெழுத்து வினைச்சொற்கள், புக்கு, தக்கு என இடையிலே வல்லெழுத்து வரப்பெற்றும் இறந்த காலம் காட்டும்.

| | |
|---|---|
| புகு + ஆன் | புக்கான்——புகுந்தான் |
| தகு + ஆன் | தக்கான்——தகுந்தான் |

எனவரும்.

| | |
|---|---|
| விடு + ஆன் | விட்டான்——விடுத்தான் |
| பெறு + ஆன் | பெற்றன் —— |

எனவரும் டு, று, என்பவற்றில் முடிந்தனவும் அவ்வாறேயாம்.

பொதுவாகத் தெரிநிலை வினைச்சொற்கள் காலங்காட்டும் உறுப்பாகிய இடைநிலையைப் பெற்றேவரும்.

இடைநிலை: — **த், ட், ற், இன்** என்பன.

## இறந்தகால இடைநிலை.

உதாரணம்: —

கற்றான் : கல் + ற் + ஆன் (ற்) இடைநிலை.
சொன்னான் : சொல் + இன் + ஆன் (இன்) இடைநிலை.
சொல்லியான்: சொல் + இன் + ஆன் (இன்) இடைநிலை.
சொல்லினான்: சொல் + இன் + ஆன் (இன்) இடைநிலை.

குறிப்பு: — இன் என்னும் இடைநிலை சிதைவுறாது நின்றும், 'இ' என்பது கெட்டு 'ன்' ஆகியும், 'ன்' என்பது கெட்டு 'இ' ஆகியும் வரும்.

நிகழ்கால இடைநிலை: — **கின்று, கிறு, ஆநின்று** என்பன.

உதாரணம்: —

பாடுகின்றான் பாடு + கின்று + ஆன் (கின்று) இடைநிலை.
பாடுகிறான் பாடு + கிறு + ஆன் (கிறு) இடைநிலை.
பாடாநின்றான் பாடு + ஆநின்று + ஆன் (ஆநின்று) இடைநிலை.

எதிர்கால இடைநிலை: — 'ப்' 'வ்' என்பன.

உதாரணம்: —

பார்ப்பான் பார் + ப் + ஆன் (ப்) இடைநிலை.
வருவான் வா + வ் + ஆன் (வ்) இடைநிலை.

தெரிநிலை வினைச்சொற்களில் இடைநிலைகளே அன்றிப் பகுதிகள் இரட்டித்துக் காலங்காட்டுவதைப் 'புக்கான்' முதலிய உதாரணத்துள் காட்டினோம். இவ்விரு வகை உறுப்புக்களுமே அல்லாமல் விகுதிகள் காலங்காட்டுவதும் உண்டு. அவற்றை மேலே கண்டுகொள்வாம்.

**60. வினை வகை:—**

தெரிநிலை வினைச்சொல் குறிப்பு வினைச்சொல் ஆகிய இரண்டினும்,

கருத்து முற்றிய வினைச்சொல்,
கருத்து முற்றாத வினைச்சொல்
என இரண்டுவகைஉண்டு.

கருத்து முற்றிய வினைச்சொல் : **வினை முற்று.**
கருத்து முற்றாத வினைச்சொல் : **எச்சம்.**

**i வினைமுற்று:—**

உதாரணம்:—

(அ) கந்தன்வந்தான். தெரிநிலை வினைமுற்று
கந்தன் (முன்பு) பொன்னன் ஆனான். குறிப்பு வினைமுற்று } உடன் பாடு.

(ஆ) கந்தன் வந்திலன். (தெரிநிலைவினைமுற்று)
கந்தன் அலன். (குறிப்பு வினைமுற்று) } மறைவினை

**ii எச்சம்:—**

எச்சங்களுள் பெயர்ச்சொற்களைச் சார்ந்து கருத்து முடித்துக்கொள்ளும் எச்சத்தைப் "**பெயர் எச்சம்**" என்

றர், வினைச்சொற்களைச் சார்ந்து கருத்து முடித்துக் கொள்ளும் எச்சத்தை **வினை எச்சம்** என்றும் கூறுவர்.

## (அ) பெயர் எச்சம்:—

செய்த என்பது கருத்துமுடியாத ஒரு வினைச்சொல் ஆகையால் எச்சம் எனப்படும். அந்தச் செய்த என்பது போனான் என்னும் வினையோடு சார்ந்து கருத்தை முடித்துக்கொள்ளுகின்றிலது. செய்த வேலை எனப் பெயர்ச் சொல்லோடு சார்ந்து முடிந்துகொள்கிறது. ஆதலால் அது பெயர்எச்சம் எனப்படும்.

| | | |
|---|---|---|
| செய்த வேலை. | இறந்தகாலம் | உடன்பாடு. |
| செய்கின்றவேலை. | நிகழ்காலம் | |
| செய்யும் வேலை. | எதிர்காலம் | |

செய்யாத வேலை. எதிர்மறைப் பெயரெச்சம்.

இவை தொழிலையும் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டுதலினாலே தெரிநிலை வினைப் பெயர் எச்சம் எனப்பட்டன.

பெரிய (பெரிதாக இருந்த, இருக்கின்ற, இருக்கும்) மனிதன். இந்தப் "பெரிய" என்பது தொழிலையும் காலத்தையும் மறைத்துக் கொண்டு வருவதால் குறிப்புவினைப் பெயர் எச்சமாயிற்று. இஃது உடன் பாடு.

அல்லாத மாடு—எதிர்மறைக் குறிப்புவினைப் பெயரெச்சம்.

## (ஆ) வினை எச்சம்:—

தன்கருத்தை வினைச்சொல்லோடு சார்ந்து முடிக்கும் எச்சம் வினை எச்சம்

இறந்தகாலம் செய்து என்னும் வாய்பாட்டினும்
நிகழ்காலம் செய என்னும் வாய்பாட்டினும்
எதிர்காலம் செயின் என்னும் வாய்பாட்டினும்
கூறப்படும்.

இந்த வினை எச்சத்தில் இடைநிலை காலம் காட்டாது விகுதியே காலம் காட்டும்.

இறந்தகால விகுதி.— உ, இ, ய்.
நிகழ்கால விகுதி:— அ.
எதிர்கால விகுதி:— இன், இல், ஆல் முதலியன.

குறிப்பு:— இவ் விகுதிகள் காலத்தையும், வினைஎச்சப் பொருளையும் தரும்.

உதாரணம்:—

நடந்து (உ) போனான்.
ஓடி (இ) வந்தான்.
போய் (ய்) நின்றான்.
} இறந்தகாலம் செய்து என்னும் வாய்பாடு.

நடக்க (அ) வருகின்றான்.
ஓட (அ) வருகின்றான்.
செய்ய (அ) வருகின்றான்.
} நிகழ்காலம் செயவென்னும் வாய்பாடு.

நடக்கின் (இன்) வருவான்.
பாடில் (இல்) மகிழ்வான்.
அடித்தால் (ஆல்) அழுவான்.
} எதிர்காலம்—செயின் என்னும் வாய்பாடு.

இவை யெல்லாம் உடன்பாட்டு வினைஎச்சம்.

நடவாது நின்றான்.
உண்ணாமல் இறந்தது.
உண்ணாமே சென்றான்.
} எதிர்மறைவினை எச்சங்கள்.

உண்ணாமே வந்தான் 'ஆ' எதிர்மறை இடைநிலை.

எதிர்மறைவினை எச்சங்கள், 'ஆ' என்னும் எதிர்மறை இடைநிலை பெறும்போதுதான் மல், மை, மே, து, என்னும் விகுதிகள் பெறும்.

குறிப்பு வினைஎச்சம்:—

மெல்ல (நடந்து) வந்தான்—இறந்தகாலம்
மெல்ல (நடக்க) வருகிறான்—நிகழ்காலம்
மெல்ல (நடப்பின்) வருவான்—எதிர்காலம்
இவை உடன்பாடு.

அல்லாது நின்றான். எதிர்மறைக் குறிப்பு வினைஎச்சம்.

வினைமுற்றுக்கள்,

1. தொழிலைச் செய்தவனையும் (கருத்தா)
2. தொழிலுக்கு உதவிய காரணத்தையும் (காரணம்)
3. தொழில் நடந்த இடத்தையும் (நிலம்)
4. அங்கே நடந்த தொழிலையும் (செயல்)
5. அது செய்யப்பட்ட காலத்தையும் (காலம்)
6. செய்யப்பட்ட பொருளையும் (செயப்படுபொருள்)

காட்டிவரும்.

உதாரணம்:- "குயவன் பானையை வனைந்தான்"

| | |
|---|---|
| செய்தவன் (கருத்தா) | குயவன் |
| கருவி | சக்கரம் |

| | |
|---|---|
| நிலம் | குயக் கொட்டில் |
| செயல் | வனைதல் |
| காலம் | இறந்தகாலம் |
| செயப்படுபொருள் | பானை. |

இந்த ஆறினையும் வனைந்தான் என்னும் தெரிநிலை வினைமுற்றுக் கூட்டிக்கொண்டு, தன்பொருளை முற்றிக்கொண்டது. இதனால் இது வினைமுற்று எனப்பட்டது.

நடந்தான் என்பது போன்ற, செயப்படுபொருள் குன்றியவினையிலே, செயப்படுபொருள் ஒழிந்த ஏனைய ஐந்துமே பெறப்படும்.

இந்த ஆறுவகைகளையும், பெயர்களையாதல் வினைகளையாதல் ஏற்றுக்கொண்டு எச்சங்களும் முடித்துக்கொள்ளும்.

11. பயிற்சி வினாக்கள்:—

1. காலம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. காலங்காட்டும் உறுப்புக்கள் எவை?
3. மூன்றுகால இடைநிலைகளையும் உதாரணங்களிற்காட்டுக.
4. தெரிநிலை குறிப்பு வினை முற்றுக்கள் எத்தனை வகைப்படும்?
5. எச்சங்கள் எத்தனைவகை? அவற்றை எவ்வாறு வேறு பிரித்தறியலாம்.
6. வினை எச்ச விகுதிகள் எவை?
7. ஒரு தெரிநிலை வினைமுற்றில் இருந்து நாம்எவ்வெவற்றை அறிந்து கொள்ளலாம்.

8. கண்ணனும், சாத்தனும் விரைந்து வந்தார்கள்; நீங்கள் எங்கே போகிறீர்கள்? என்றுகேட்டேன். அவர்கள் பாடசாலைக்குப் போகின்றோம் என்றார்கள். பாடசாலையில் என்னவிஷேசம் நடக்கப்போகிறது? என்று கேட்டேன். கதம்பக்கச்சேரி நடைபெறப் போவதாகக் கூறினார்கள். யானும் அவர்களுடன் போனேன். அப்போதுதான் கதம்பக்கச்சேரி ஆரம்பமாயிற்று. வேறு பல பாடசாலைகளிலும் படிக்கும் மாணவர்கள் அதில் பங்கு பற்றினார்கள். அன்று நடந்த கதம்பக்கச்சேரி மிகவும் நன்றாக இருந்தது.

இதிலுள்ள வினைச்சொற்களை வகைப்படுத்து.

## 61. வினை முற்று வகை:—

வினை முற்றுக்கள்

(அ) தன்மைவினைமுற்று,
(ஆ) முன்னிலை வினைமுற்று,
(இ) படர்க்கை வினைமுற்று

என மூன்று வகைப்படும்.

### (அ) தன்மை வினை முற்று:—

நான், நாம் ஆதிய தன்மைப் பெயர்கட்குப் பயனிலையாய் வரும் வினைமுற்றுத் **தன்மை வினை முற்றாம்.**

அது,

1. தன்மை ஒருமை வினைமுற்று,
2. தன்மைப் பன்மை வினைமுற்று

என இரண்டு வகைப்படும்.

### i. தன்மை ஒருமை வினைமுற்று:—

தன்மை ஒருமைப் பெயருக்குப் பயனிலையாக வருவது **தன்மை ஒருமை** வினைமுற்றாம்.

இவ் வினைமுற்றுக்கள், என், ஏன், அன் என்னும் விகுதிகளுள் ஒன்றைப் பெற்றுவரும்.

உதாரணம்:—

| உடன்பாடு. | | எதிர்மறை. | |
|---|---|---|---|
| யான் வந்தேன்<br>யான் முன் பெரியேன் | ஏன் | யான் நடந்திலேன்<br>யான் கொடியன் அலேன் | ஏன் |
| யான் வந்தனென்<br>யான் கரியென் | என் | யான் வந்திலென்<br>யான் சிறியன் அலென் | என் |
| யான் அறிந்தனன்<br>யான் அறிவினன் | அன் | யான் அறிந்திலன்<br>யான் அறிவிலன் | அன். |

ii. தன்மைப் பன்மை வினை முற்று:—
தன்மைப் பன்மைப் பெயருக்குப் பயனிலையாக வரும்.

விகுதிகள்:= அம், ஆம், எம், ஏம், ஓம்.

உதாரணம்:—

| உடன்பாடு. | | எதிர்மறை. | |
|---|---|---|---|
| நாம் படித்தனம்<br>நாம் பலகயினம் | அம். | நாம் படித்திலம்<br>நாம் பகையலம் | அம். |
| நாம் கொடுக்கின்றாம்<br>நாம் நடையினாம் | ஆம். | நாம் கொடுக்கின்றிலாம்<br>நாம் நடையினம் அல்லாம் | ஆம் |
| நாம் பிடித்தனெம்<br>நாம் அறிவினெம் | எம். | நாம் பிடித்திலெம்<br>நாம் அறிவினம் அலேம் | எம் |
| நாம் ஆடினேம்<br>நாம் வறியேம் | ஏம். | நாம் ஆடிலேம்<br>நாம் வறியம் அலேம் | ஏம் |
| நாம் சிரித்தோம்<br>நாம் நண்பினோம் | ஓம். | நாம் சிரித்திலோம்<br>நாம் நண்பினம்அலோம் | ஓம். |

(ஆ) **முன்னிலை வினை முற்று:—**

முன்னிலைப் பெயர்கட்குப் பயனிலையாய் வரும் வினைமுற்றுக்கள் **முன்னிலை வினை** முற்றுக்களாம்.

அவை,

1. முன்னிலை ஒருமை வினைமுற்று,
2. முன்னிலைப் பன்மை வினைமுற்று

என இரண்டு வகைப்படும்.

i. முன்னிலை ஒருமை வினைமுற்று.

இது முன்னிலை ஒருமைப் பெயருக்குப் பயனிலையாய் வரும்.

விகுதி:— ஐ, ஆய், இ என்பன.

**உதாரணம்:—**

| உடன்பாடு. | | எதிர்மறை. | |
|---|---|---|---|
| நீ, **உண்டனை** | ஐ | நீ **உண்டிலை** | ஐ |
| நீ, **பெரியை** | ஐ | நீ பெரியை **அல்லை** | ஐ |
| நீ, **போகின்றாய்** | ஆய் | நீ **போகின்றிலாய்** | ஆய் |
| நீ, **கரியாய்** | ஆய் | நீ கரியை **அல்லாய்** | ஆய் |
| நீ **உண்டி** | —இ | நீ **உண்டிலி** | —இ |
| நீ **இப்போது வில்லி** | —இ | நீ **நன்றிலி** | —இ |

ii. முன்னிலைப் பன்மை வினைமுற்று:—

முன்னிலைப் பன்மைப் பெயர்கட்குப் பயனிலையாக வரும்.

விகுதி:— இர், ஈர், கள் என்பன.

உதாரணம்:—

| உடன்பாடு. | | எதிர்மறை. | |
|---|---|---|---|
| நீவிர் உண்டனிர்<br>நீவிர் பெரியீர் | ஈர் | நீவிர் உண்டிலிர்<br>நீவிர் பெரியிர் அல்லிர் | இர் |
| நீவிர் வருகின்றீர்<br>நீவிர் அன்பினீர் | ஈர் | நீவிர் வருகின்றிலீர்<br>நீவிர் அன்பினிர் அல்லீர் | இர் |
| நீவிர் செல்வீர்கள்<br>நீவிர் காதலீர்கள் | கள் | நீவிர் சொல்லீர்கள்<br>நீவிர் காதலர் அல்லீர்கள் | கள். |

## (இ) படர்க்கை வினைமுற்று:—

இஃது, உயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பால் பெயர்கட்கும், அஃறிணை ஒன்றன்பால்; பலவின்பால் பெயர்கட்கும் பயனிலையாக வரும்.

இது
1. படர்க்கை ஆண்பால் வினைமுற்று,
2. படர்க்கை பெண்பால் வினைமுற்று,
3. படர்க்கை பலர்பால் வினைமுற்று,
4. படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று,
5. படர்க்கை பலவின்பால் வினைமுற்று

என ஐந்து வகைப்படும்.

### i படர்க்கை ஆண்பால் வினைமுற்று:—

இஃது உயர்திணை ஆண்பாற்பெயர்கட்குப் பயனிலையாக வரும்.

விகுதி:— அன், ஆன், என்பன.

உதாரணம்:—

| உடன்பாடு. | | எதிர்மறை. | |
|---|---|---|---|
| அவன் சென்றனன் | அன் | அவன் சென்றிலன் | அன் |
| அவன்முன் பொன்னனன் | | அவன் பொன்னன் அலன் | |
| கந்தன் இருக்கிறான் | ஆன். | கந்தன் இருக்கின்றிலான் | ஆன் |
| கந்தன் கரியான் | | கந்தன் கரியன் அல்லான் | |

ii. படர்க்கைப் பெண்பால் வினைமுற்று:—

இஃது உயர்திணைப் பெண்பால் பெயர்கட்குப் பயனிலையாக வரும்.

விகுதி:— அள், ஆள் என்பன.

உதாரணம்:—

| உடன்பாடு. | | எதிர்மறை. | |
|---|---|---|---|
| அவள் பாடினள் | அள் | அவள் பாடிற்றிலள் | அள் |
| அவள் கூந்தலள் | | அவள் கூந்தலிலள் | |
| பொன்னி வருவாள் | ஆள் | பொன்னி வாராள் | ஆள் |
| பொன்னி கரியாள் | | பொன்னிகரியள்அல்லாள் | |

iii. படர்க்கைப் பலர்பால் வினைமுற்று:—

இஃது உயர்திணைப் பலர்பால் பெயர்கட்குப் பயனிலையாய் வரும்.

விகுதி,— அர், ஆர் என்பன.

உதாரணம்:—

| உடன்பாடு. | | எதிர்மறை. | |
|---|---|---|---|
| அவர் பேசினர்<br>அவர் காதலர் | அர் | அவர் பாடிற்றிலர்<br>அவர் காதலர் அல்லர் | அர் |
| அவர் வருகின்றார்<br>அவர் மனைவியார் | ஆர் | அவர் வருகின்றிலார்<br>அவர் மனைவியார் அலார் | ஆர் |

iv. படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று:—

இஃது அஃறிணை ஒன்றன்பாற் பெயர்கட்குப் பயனிலையாய் வரும்.

விகுதி:— று, டு, என்பன.

உதாரணம்:—

| உடன்பாடு. | | எதிர்மறை. | |
|---|---|---|---|
| அது உண்டது<br>அது பெரியது | து | அது உண்டிலது<br>அது பெரியதன்று | து |
| அது கூயிற்று<br>அது குறுங்காலிற்று | று | அது காலிற்று அன்று | று |

v. படர்க்கைப் பலவின்பால் வினைமுற்று:—

இஃது அஃறிணைப் பலவின்பால் பெயர்கட்குப் பயனிலையாய் வரும்.

விகுதி:— அ, ஆ என்பன.

உதாரணம்:—

| உடன்பாடு. | | எதிர்மறை. | |
|---|---|---|---|
| பறவை பறந்தன<br>பறவை சிறகின | அ. | பறவை பறந்ில<br>பறவை சிறகின அல<br>குதிரைகள் உண்ணு. | அ. |

குறிப்பு:—

ஆகாரவிகுதி உடன்பாட்டில் வராது. இவ்விகுதி மூன்று காலத்துக்கும் பொதுவாய் எதிர்மறையில் வரும்.

## 62. ஏவல் வினை முற்று:—

முன்னிலை இடத்திலே, ஏவல் பொருளிலே, எதிர் காலத்திலே வரும் வினைமுற்று **ஏவல் வினைமுற்றும்.** இது குறிப்பு வினையில் வாராது.

| | |
|---|---|
| நீ உண் (ணாய்)<br>நீ உண் | ஒருமை i |
| நீவிர் உண்மின் | பன்மை ii |

### i. ஏவல் ஒருமை வினைமுற்று:—

இது முன்னிலை ஒருமைப் பெயர்கட்குக் கட்டளை இடும் பொருளில் பயனிலையாக வரும். இதன் விகுதி ஆய்' ஒன்றுமாம். இவ்விகுதி மறைந்தும் வெளிப்பட்டும் வரும்.

உதாரணம்:—

நீ நட (வாய்)
நீ நட.

இஃது எதிர்மறையில் 'ஆ' இடைநிலையும், 'ஏ' என்னும் விகுதியும் பெற்றுவரும். 'இ'கர விகுதி பெறுதலும் உண்டு.

உதாரணம்:—

நீ நடவாதே (ஏ)

நீ உண்ணாதி (இ)

ii. ஏவல் பன்மை வினைமுற்று:—

இது, முன்னிலைப் பன்மைப் பெயர்கட்கு கட்டளை இடும் பொருளில் பயனிலையாய் வரும்.

விகுதி:— மின், உம், இர், ஈர், கள் என்பன.

உதாரணம்:—

நீர் நடமின் (மின்)

நீர் உண்ணும் (உம்)

நீர் ஓடுதிர் (இர்)

நீர் வாரீர் (ஈர்)

இஃது எதிர்மறையில் அல், ஆ, என்னும் எதிர்மறை இடை நிலைகளுள் ஒன்றுபெற்றுவரும்.

உதாரணம்:—

நீர். போகன்மின் (அல்)

நீர் வராதீர் (ஆ)

## 63. வியங்கோள் வினைமுற்று:—

சும்மா கட்டளை இடாது, விருப்பு வெறுப்புக்களால் உயரவும் தாழவும் கருதிக்கொண்டு, ஏவப்படும் வினைமுற்று வியங்கோள்வினை முற்றாம். இஃது இருதிணை ஐம்பால் மூவிடப் பெயர்கட்கும் பயனிலையாய் வரும்.

விகுதி:— க, இய, இயர், அ என்பன.

உதாரணம்:—

| | |
|---|---|
| நான்<br>நீ<br>அவன்<br>அவள்<br>அவர்<br>அது<br>அவை | வாழ்க, வாழிய, வாழியர், வாழ (வாழ்த்து ஏவல்)<br>கெடுக, கெடுகிய, கெடுகியர் கெட (வைதல் ,, )<br>உண்க, உண்ணிய, உண்ணியர் உண்ண (வேண்டல் ,, )<br>ஓடுக ஓடிய ஓடியர் ஓட (பொது ஏவல்) |

வாழிய, வாழியர் வாழ என்பதற்கும் வாழ்க என்பதே பொருள்.

இஃது எதிர்மறையில் மேற் கூறிய விகுதிகளோடு 'அல்' என்னும் எதிர்மறை இடைநிலை பெற்றுவரும்.

உதாரணம்:—

வாழற்க.

உண்ணற்க.

இஃது உடன்பாட்டுக்கும் எதிர்மறைக்கும் பொதுவாய் வருதலும் உண்டு. அதன் விகுதி 'அல்' என்பது.

உதாரணம்:—

அறிஞனைப் பேரியன் எனல் (என்க)
அறிஞனைப் பதர் எனல் (என்னற்க)

குறிப்பு:— இருதிணை ஐம்பால் மூவிடங்கட்கும் பொது வான குறிப்பு வினைமுற்று:-

வேறு, இல்லை, உண்டு என்பன.

இருதிணை ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவான தெரிநிலை வினைமுற்று:-

வியங்கோள் வினைமுற்றும்.

**64. வினையால் அணையும் பேயர்.—**

கண்ணன் குள்ளனைக் கத்தியால் வெட்டினான்.

1. வெட்டினான் எங்கே போனான்?
2. வெட்டினானைக் கண்டாயா?
3. வெட்டினானால் என்ன நிகழ்ந்தது?
4. வெட்டினானுக்கு யார் தண்டனை கொடுத்தார்?

இங்கே கண்ணன் வெட்டினான் என்றபோது, வெட்டினான் என்பது வினைமுற்று ஆகும்.

1, 2, 3, 4, ஆவது வாக்கியங்களில் உள்ள வெட்டினான் என்பவை வினைமுற்றுக்கள் அல்ல; அவை பெயர்களாகும்; அந்நான்கும் கண்ணனைக் குறிப்பிடுகின்றன. இப்போது கண்ணனுக்கு வெட்டினான் என்பது பெயர் ஆயிற்று.

இவ்வாறு வினைமுற்றாக இருந்தும் பெயராக வருவனவே வினையாலணையும் பெயராம்.

உதாரணம்:—

வந்தானைக் கண்டேன்.

இப்போது பெரியனை அறிவேன்.

## 65. தொழில் பெயர்:—

யாராலாவது செய்யப்படும் தொழில்களின் பெயரைக் குறிப்பிடுவது தொழில் பெயராகும்.

உதாரணம்:—

கோத்தல்
ஆடல்
வாட்டம் முதலியன

ஆசிரியர் குறிப்பு:— (தொழிற் பெயர்.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. ஆடின ஆட்டம் | (அம்) | 8. மறந்த மறதி | (தி) |
| 2. ஆடின ஆடல் | (அல்) | 9. உணர்ந்த உணர்ச்சி | (சி) |
| 3. கொன்ற கொலை | (ஐ) | 10. புலந்த புலவி | (வி) |
| 4. நடந்த நடக்கை | (கை) | 11. விக்கிய விக்குள் | (உள்) |
| 5. பார்த்த பார்வை | (வை) | 12. செத்த சாக்காடு | (காடு) |
| 6. நடந்த நடப்பு | (பு) | 13. கூடிய கூப்பாடு | (பாடு) |
| 7. வந்த வரவு | (வு) | 14. தோற்றிய தோற்றரவு | (அரவு) |

மேற்கூறிய ஆட்டம் முதலாகிய தொழிற்பெயர்களைப் பெயர்எச்சங்கள் கொண்டு முடிந்தன. வினை எச்சங்கள் அத்தொழிற் பெயர்களைக் கொண்டு முடியாவாம். இத் தொழிற் பெயர்கள் எல்லாம் வினை அடிகளால் தோன்றின வேனும் வினைத்தன்மை குன்றிவந்தன எனவே கொள்ளுதல்வேண்டும்.

அடைந்து வாரானை (வருதல்) (ஆனை)
நடந்து வந்தமை (மை)
நடந்து வந்தது (து)
சென்று வருதல் (தல்)

என்பவற்றில் அடைந்து முதலாகிய வினை எச்சங்கள் வாரானை முதலாகிய தொழிற்பெயர்களைக் கொண்டன. அவை பெயர் எச்சங்களைக் கொள்ளுதல் அரியவாகும். வந்த வருதல் எனப் பெயர் எச்சமும் கொள்ளும் என்பாரும் உளர். அவர் கொள்கை ஆயற்பாலது. இப்படிப்பட்ட தொழிற் பெயர்கள் பெயர்த்தன்மை முற்றிலபோலும்.

உணற்கு, வருதற்கு என்பவை பிளவுபடாது இசைக்கும்போது, வினை எச்சங்களாகவும், அவை பிளவுபட்டு இசைக்கும்போது தொழிற்பெயராகவும் கொள்ளற்கு இடனுண்டு:

ஆனால், மாட்சிக்கு வந்தான், கல்விக்கு அமைந்தான் என்பனபோன்ற தொழிற்பெயர்கள், ஒன்றுபட்டு வினை எச்சங்களாக இசைப்பதில்லை.

இதனாலும் தல், அல் முதலாய விகுதிகளைப் பெற்று வரும் தொழிற்பெயர்கள், பெயர்த்தன்மை முற்றிவரும் வழக்காறு இலவாகும் எனக்கண்டுகொள்க. இவ்விகற்பங்கள் எல்லாம் பின்னர் விளக்கப்படும்.

12. பயிற்சி வினாக்கள்:—

1. வினைமுற்றுக்கள் இடவகையால் எத்தனை வகைப்படும்?
2. வினைமுற்றுக்களின் ஒருமை பன்மைகளை எப்படி அறியலாம்?

3. எல்லா விகுதிகளும் தோன்ற வினைச்சொற்களைக் குறித்துக் காட்டுக.
4. ஏவல் வினைமுற்று எப்பொருளில் வரும்? எக்காலத்தில் எவ்விடத்தில் வரும்?
5. வியங்கோள் வினைமுற்றுக்கும் ஏவல் முற்றுக்கும் அமைந்த ஒற்றுமை வேற்றுமைகளைக் கூறுக.
6. இருதிணை ஐம்பால்களுக்குப் பொதுவாகிய வினைகள் எவை?

குறிப்பு:

ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று என்பனவும், இன்னும் சில வினைமுற்றுக்களும் வினையாலணையும் பெயராக வருதலில்லை.

பெயரெச்சம் வினையாலணையும் பெயரைக் கொண்டு முடியாது.

வினை எச்சம், வினையாலணையும்பெயர், தொழில் பெயர்களையும் கொண்டு முடியும்.

## iii இடைச்சொல்

(இடச்சொல்=இடைச்சொல்)

நான் அவனுக்குப் பொன்னைக் கொடுத்தேன். பொன்னை ஏற்றுக்கொண்டவன் அவன். இந்தப் பொருளைக் குவ்வுருபு காட்டுகின்றது. இவ்வுருபு பெயர்ச் சொல்லைச்சாராது தானே ஒரு சொல்லாய் நின்று, தன்

பொருளை உணர்த்தாது. இப்படியே ஏனைய ஐ, ஆல், கொண்டு என்னும் உருபுகளும் பெயர்ச்சொல்லைச் சார்ந்தே தம்பொருளைக் கொடுப்பன அன்றித் தனித்து நின்று கொடுப்பன அல்ல. இவை இடைச்சொற்களே.

பொருளன் (பொருள் + அன்) என்னும் பெயரின் இறுதியில் உள்ள "அன்" என்பது உயர்திணையையும் ஆண்பால் ஒருமைப் படர்க்கையையும் காட்டுகிறது. அது தானகத் தனித்து "அன்" என நின்று அப் பொருளைக் காட்டாது. அந்தச் சொல்லின் இடத்தைச்சார்ந்து பொருளைக் கொடுக்கின்றது. சென்றான் (செல் + ற் + ஆன்) என்பதில் உள்ள விகுதியும் இப்படியே உரைக்கப்படும். பெயர் வினைகளின் விகுதிகளும் இப்படிப்பட்டனவாதலின் அவையும் இடைச்சொற்களே.

செய்தான் (செய் + த் + ஆன்) என்னும் வினைமுற்றின் இடையில் உள்ள "த்" இடைநிலை காலங்காட்டுகிறது. இதுவும் தனியே "த்" என நின்று காலங்காட்டாது. வினையின் இடத்தையே சார்ந்து காலங்காட்டும். (அறி + ஞ் + அன்) அறிஞன் என்பதில் உள்ள "ஞ்" இடைநிலை வினையாகாது பெயர்ப்பொருளைக் காட்டியது. ஆகவே இவ்விருவகை இடைநிலைகளும் இடைச்சொல்லே.

அவன், இவன், உவன் என்பவற்றின் பகுதிகளாகிய அ, இ, உ என்பனவும், எது, யாது, ஏது என்பன போன்றவற்றில் உள்ள எ, யா, ஏ என்பனவும், பொன்னன் போன்றவற்றில் உள்ள "பொன்" என்னும் பகுதிபோல வருகின்றன. அவ்வாறு வரினும் பொன் முதலியவை தானே நின்று சொல்லாகிப் பொருளை உணர்த்தும் ஆனல் சுட்டு வினுப்பகுதிகள் பொருள்

உணர்த்தும் தனிப்பகுதிகள் ஆகா. ஆதலினால் அவையும் இடைச்சொற்களே. புறச்சுட்டெழுத்துக்களும் புற வினவெழுத்துக்களும் இடைச்சொற்களே.

மற்றவன் என்பதின் பகுதியாகிய மற்று என்பதும் பொருள் வேறுபட்டமைக்குப் பிரதியாக வருதலின் இடைச்சொல்லேயாம். ஆனால் மற்று என்பது பெயர்ச்சொற்களின் முன்பின் இடங்களில் சார்ந்தே பொருள் உணர்த்தும்.

உதாரணம்: மற்று ஒன்று

அது மற்றியாது என வினவோடும் வரும். "பிற" வென்பதும் இப்படியே வரும்.

தன்பொருளைத் தனித்துச் சொற்களாக நின்று உணர்த்தாது, பெயர்வினைகளைச் சார்ந்து தம்பொருளை அவற்றுக்குக் கொடுப்பன எவையோ அவை இடைச்சொற்களாம்.

---

## iv உரிச்சொல்

---

நன்மை: (நல்+மை) கருமை: (கரு+மை) செய்மை: (செய்+மை) நெடுமை: (நெடு+மை) போன்ற பண்புப்பெயர்களும் நடத்தல் செய்தல் முதலிய தொழிற்பெயர்களும் ஆய அவ்விரண்டின் பகுதிகளும் ஆகிய நல், கரு, நெடு முதலியனவும், நட, செய், முதலாகிய தொழிற்பண்புகளும், நிறம் முதலாகிய பண்புப் பகுதிகளும் உரிச்சொற்களாம்.

குறிப்பு:— நிரப்ப என்னும் தொழில் பண்பு வினைச் சொற்களுக்குப் பகுதியாக நின்று, வினை உறுப்புக்களை ஏற்று வந்தமை காண்க.

சாலப் பேசினன் - (சால - நிரம்ப) இதுவும் உரிச் சொல்.

கழி என்பது மிகுக்கு மீறிய என்னும் பொருளில் வரும். இதுவும் வினை உறுப்புக்களோடு சேர்ந்து வரும்.

நுவ, நனி முதலிய பண்புகள், இப்போது விளங்கற்கு இயன்றில. இவற்றிற்கு மேற்கோள் அகப்பட்டில.

உரிச்சொல்லைப்பற்றி உரைநடை ஆசிரியர் பலரும், நூல்களில் உரிச்சொல் இயலைச் சேர்த்துக் கூறினமை யான் யாமும் கூறநேர்ந்தது. சிறுமாணவர் நிலையை நோக்கும்போது இடைச்சொல்லைக் கூறுதலே மிகுதிப் படுமாதலின், உரிச்சொல்லைப்பற்றி ஏன் பேசுதல் வேண்டும்?

**சொற்பங்கீடு**:— ஒரு வாக்கியத்தின் பயனிலையை யார் என வினவும்போது விடையாக வருவன எல்லாம் எழுவாய் எனக் கொள்க.

பின்பு அப் பயனிலையை வைத்துக்கொண்டு எவனை, எவளை, எதை என வருவனவற்றுள் ஏற்றபடி ஒன்றனைக்கொண்டு வினவ விடையாக வருவன எல்லாம் செயப்படுபொருள்.

இனி எழுவாயையும் செயப்படுபொருளையும், எப்படிப் பட்ட என வினவ விடையாக வருவன வெல்லாம் எழுவாய்க்கும் செயப்படு பொருளுக்கும் அடைமொழிகளாம்.

உதாரணம்: ஓடி இளைத்து வந்த யானை நின்றது

இங்கே பயனிலை நின்றது என்பது.

வினா:- எது நின்றது?

விடை:- யானை (இதுவே எழுவாய்)

வினா:- எப்படிப்பட்ட யானை?

விடை:- ஓடி இளைத்து வந்த (இது எழுவாய்க்கு அடைமொழி)

கந்தன் ஓங்கி வளர்ந்த மரத்தை வெட்டினான்.

பயனிலை வெட்டினான்.

எழுவாய் கந்தன்.

வினா:- எதை வெட்டினான்?

விடை:- மரத்தை வெட்டினான் (செயப்படுபொருள்)

வினா:- எப்படிப்பட்ட மரம்?

விடை:- ஓங்கிவளர்ந்த (அடைமொழி)

கந்தன் மரத்தைத் தறித்து வீழ்த்தினான்:

எழுவாய்: கந்தன்

பயனிலை: வீழ்த்தினான்

மரம் செயப்படுபொருள்

வினா:- எப்படி வீழ்த்தினான்?

விடை:- தறித்து (பயனிலைக்கு அடைமொழி).

சொல்லிலக்கணம் நிறைவேறியது.


CHESTNUT BACKED B ER


ORANGE BREASTED FLOWER CKER

Printed at the
Sri Sanmuganatha Press,
Jaffna.